# வெற்றிமுனை

பன்னாட்டுத் தமிழியல் மேம்பாட்டு மாத இதழ்

தனி இதழ் : ரூ. ३०/-  ISSN - 2394 - 2428

அன்பு நிறைந்த அறிவைத் தேடி ஒரு பயணம்

*மலர் - 10*  *ஏப்ரல் - 2018*  *இதழ் - 05*

*சிறப்பாசிரியர்*
**நீதியரசர் ச. மோகன்**
(உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர்)

*முதன்மை ஆசிரியர்*
**நீதிபதி மூ. புகழேந்தி**

*ஆசிரியர்*
முனைவர் மோ. பாட்டழகன்
93804 17307

*பொறுப்பாசிரியர்*
பேரா. முனைவர் ச. விஜயலட்சுமி

*துணை ஆசிரியர்கள்*
பேராசிரியர் சு. முத்தையா
கவிஞர் திருவைபாபு
இர. மகேந்திரன்
கவிஞர் உமர் கத்தாபு
திருமதி. அனிதா பரமசிவம்
(எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்
கவிஞர் செந்தாமரைக்கொடி

*அமெரிக்கா - பொறுப்பாசிரியர்*
எழுத்தாளர் ஜெ. புவனேஷ்வரி

*ஆலோசனைக் குழு*
முனைவர் மருதூர் அரங்கராசன்
முனைவர் இனியன் கோவிந்தராஜீ, கரூர்
முனைவர் சி. கோமளவல்லி
எம். கோவிந்தன்
பேராசிரியர் அரகங். சீனிவாசன்
பேரா. திருமதி. சோதிலட்சுமி
இரா. கௌதமராஜன்
திருமதி. விசயலட்சுமி மாசிலாமணி
முனைவர் மோ.ஐ. மகேஸ்வரி
முனைவர் ஈ. யுவராணி
சி. சதீஷ்
திருமதி. பூமாவதி இராசேந்திரன்

**மின்னஞ்சல் மூலமும்**
**படைப்புகளை அனுப்பலாம்**
vasantha.tha399@gmail.com

இதழின் அனைத்துத் தொடர்புகளுக்கும் படைப்புகள் மற்றும் கருத்துரைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர் 'வெற்றிமுனை'
26, குறுக்குத் தெரு, ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், சென்னை – 600 088.
93804 17307

புலவர், முத்தமிழ்க் கவிஞர், முனைவர்

ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்களின்

# "நூலகத்தால் உயர்ந்தேன்"

வாழ்க்கை வரலாற்று ஆவணம்.

எழுபத்தைந்து அகவை நிரம்பிய அவர்தம் வாழ்நாளில் சந்தித்த பலநூறு அறிஞர்களைப் பதிவு செய்து வைத்துள்ளார். இந்நூல் ஒரு குட்டி இலக்கிய வரலாறு எனலாம்.

***1096 பக்கம் கொண்ட இந்நூல் விலை ரூ. 1200/ சலுகை விலை ரூ. 800/- மட்டும். நூல் வேண்டுவோர் :***

***தொடர்புக்கு :***

**முனைவர் மோ. பாட்டழகன்,**

**வசந்தா பதிப்பகம்,**

26, குறுக்குத் தெரு, சோசப்பு குடியிருப்பு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
பேசி : 044 - 22530954, 225333667, 93804 17307

| | | | |
|---|---|---|---|
| பெற்றோரைப் | போற்றிடுவோம் | பெருமையுடன் | வாழ்ந்திடுவோம் |
| கற்றோரை | நாடிடுவோம் | கலையெல்லாம் | மாந்திடுவோம் |
| வெற்றிமுனை | எய்திடுவோம் | விண்தொட்டுப் | பார்த்திடுவோம் |
| குற்றமில்லா | வாழ்வாலே | குவலயத்தைக் | காத்திடுவோம். |

**- நீதிபதி மூ. புகழேந்தி**

இது அன்றாடம் நம் வழக்கில் நாம் சாதரணமாக உபயோகப் படுத்தும் சொல்தான். இதன் பொருளை நாம் என்றுமே ஊன்றிப் பார்ப்பதில்லை. அதற்குண்டான சூழ்நிலையையும் நாம் நினைத்துக் கூடப் பார்ப்ப தில்லை. படித்தவர் முதல் படிக் காத பாமரர் வரை இச்சொல்லை உபயோகித்து வருகின்றனர்.

நாம் செய்யும் வேலையில் இரண்டு வகையுண்டு. ஒன்று நாம் அவசியம் செய்ய வேண்டிய வேலை. இதற்கு எவ்வித தயக்கமும் மறுப்பும் தேவை யில்லை. அது நம் வாழ்வோடு, நம் அன்றாட பிழைப்போடு ஒன்றியது. அதே நேரத்தில் மற்றொரு வேலை; அதாவது நமக்கு வேண்டாத வேலை. இதுதான் இப்போது நாம் கவனிக்க வேண்டியது. இதற்கு ஒரு சிறு உதாரணம்.

ஒருவன் வயல் வேலைக்கு செல்கின்றான். அது அவன் பிழைப்பை நடத்துவதற்காக. அந்த வயல் வழிதான் அவனுக்கு வருவாய்த் தருகின்றது. அது இல்லை என்றால் அவன் வீட்டு அடுப்பில் பூனைக் குட்டிதான்



போடும் என்பது பாமரர் இடையே உள்ள வழக்காகும். அப்படி மண்வெட்டியோடு செல்கின்ற அவன் வழி ஓரத்தில் அவனுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாமல் அல்லது பாதிப்பைத்தராமல் இருக்கின்ற ஒரு புற்றை மண்வெட்டியால் வெட்டப்போக அதிலிருந்து ஒரு நாகப்பாம்பு திடீரென வெளி யேறிட அதைக் கண்ட அவன் பயந்து மருண்டு ஓட அது துரத்த பிழைத்தால் போதுமென பறக்கின்றான். இப்போது நாம் பார்ப்போம். இது அவனுக்குத் தேவையா? இது அவனுக்குத் தேவையில்லை என்று நாமும் அதே நேரத்தில் தப்பித்து ஓடிய அவனும் நினைத்து ஒரு முடிவுக்கு வந்துவிடுவோம். ஆக இது அவனுக்கு வேண்டாத வேலை என்பது திண்ணம்தான்.

அதே நேரத்தில் இன்னும் சற்று ஊன்றிப்பார்க்க அப்புற்று வேறு ஒருவனின் சொந்த நிலத்தில் இருக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். அப்புற்று அவன் சொந்த நிலத்தில் இருப்பதால் அது அவனுக்கு பாதிப்பே. அதாவது அந்த இடத்தில் அவனுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் இழப்பு அவனுக்கு ஏற்படுகின்றது. அதனால் அப் புற்றை நீக்க வேண்டும் என்ற அவன் எண்ணம் அவனுக்கு ஏற்படுவது நியாயமே. இது அவனைப் பொறுத்தவரையில் வேண்டாத வேலையாகக் கொள்ள முடியாது. அது அவனுக்கு மிகவும் வேண்டிய வேலையே.

கண்ணுக்கும் கருத்துக்கும் அழகான மனைவி இருப்பாள். அன்பையும் கொட்டிக் கொடுப் பாள். என்றாலும் அவன் உடலாசை அவளோடு நின்று விடாது. அவன் மனம் மட்டும் அலைபாயும் அடுத்தவீட்டு மாங் காய் பறிக்க. அவனைப் போன்றே அடுத்தவீட்டு பெண்மணி யும் அன்பான அழகான கணவன் இருக்க அடுத்தவனின் அர வணைப்பிற்கு ஏங்கி திசை மாறி போவாள். இவர்களால் இரண்டு குடும்பங்களும் அமைதி இழந்து அல்லலுறும். சொன்னாலும் கேட்க மாட்டார்கள். அந்த அள விற்கு அவர்களின் மனவெறி முற்றிப் போகும். இதில் இரண்டு விதமான ஆபத்துகள் முளை விட்டு வளர ஆரம்பித்து விடும். யாருக்கும் தெரியப் போவதில்லை என்ற தப்பான எண்ணத்தில் கணவனை ஏமாற்றும் வஞ்சகி கள்ளக் கணவனுடன் சேர்ந்து கூட்டு சதி செய்து கணவனை கொலை செய்து விடுவாள். பின்னர் உண்மை அம்பலமாகி ஊருலகம் சிரிக்க கம்பி எண்ணி காலத்தைக் கழிக்கும் நிலைக்குத் தள்ளப்படுவாள். இது அவளுக்கு வேண்டாத வேலைதானே! அதே போல் கள்ளக் காதலியுடன் சல்லாபிக்கும் கள்ளக் காதலனைக் கண்டுகொண்ட அவளின்



கணவன் கோபத்தால் மனைவி யையும் கொல்வான்: கள்ளக் காதலனையும் கொல்லத் துணி வான். இது அந்தக் கயவர்களுக்கு வேண்டாத வேலைதானே!

வேலை என்பது அவரவர் களுக்கு வேண்டியதுதான். எது வேண்டிய வேலை: எது வேண் டாத வேலை என்பதை நாம் ஆராய்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும். மேலே ஒன்றாவது

உதாரணத்தில் கண்டுள்ளதில் ஒருவனுக்கு வேண்டாத வேலை மற்றவனுக்கு வேண்டிய வேலை ஆகம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். இரண்டாவது உதாரணத்தில் கண்டுள்ளது இருதரப்புக்குமே வேண்டாத வேலை என்பதை எல்லோரும் நன்கறிவோம். நாம் வேண்டாத வேலையில் ஈடுபட்டால் விபரீ தங்கள்தான் விளையும். எனவே நமக்குள்ள பகுத்தறிவின் படி அவற்றைப் பிரித்து ஆராய்ந்து வேண்டாத வேலையில் ஈடுபடு வதை நாம் தவிர்க்க வேண்டும். பகுத்தறிவு என்றால் தந்தை பெரியார் கூறிய அறிவுதான் என்று நாம் விட்டுவிடக் கூடாது. நல்லது கேட்டதை நாம் உணர்ந்து கொள்ளும் அறிவுதான் பகுத்தறிவு. எனவே எந்த வேலையையும் நமக்கு வேண்டியதா என்று அதில் ஈடுபடுமுன் ஆராய்ந்து அறிந்து கொண்டு ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடின் நன்மையே பிறக்கும். நாமும் அதை உணர்ந்து வாழ்ந்தால் வாழ்க்கை தடையில்லாத வண்டி போல் ஓடிக்கொண்டே இருக்கும்.

●

## ஐந்து நூல்கள் வெளியீட்டு விழா




■ கவிஞர் ஆவியூரார் எழுதிய, ஐந்து நூல்கள் வெளியீட்டு விழா, நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற, (இடமிருந்து) நூலாசிரியர் ஆவியூரார், திரைப்பட இயக்குனர், எஸ்.எஸ்.குமரன், முனைவர், வ.ரகுராமன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குனர், கோ.விஜயராகவன், எஸ்.ஆர்.எம்., பல்கலை தலைவர், ப.சத்தியநாராயணன், கே.ஜி.எஸ்., குழும நிர்வாக இயக்குனர், பி.வி.சண்முகம்.

# கொங்கு நாட்டுப்புற வாழ்வியல்

முனைவர் **க. சரவணக்குமார்,**
உதவி பேராசியர் தமிழ்த் துறை,
கோபி கலை அறிவியல் கல்லூரி,
கோபிசெட்டிபாளையம்.

**முன்னுரை:**

**கொ**ங்கு நாடு தனக்கென்று எப்பொழுதும் தனியான எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கம் ஆகியவைகளைக் கொண்டது, தொண்டைநாடு, கொங்குநாடு ஆகியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து. முன்பே இருந்தது, தண்டியலங்காரம் என்னும்¨ அணியிலக்கண நூலின் மிகப் பழமையான மேற்கோள்பாடல் ஒன்று வியன் தமிழ்நாடு ஐந்து என்று கூறுகிறது. சைவ சமய நூல்களில் மிகவும் தொன்மை யானதாகக் கருதப்படுகின்ற திருமந்திரம் தமிழ் மண்டிலம் ஐந்து என்று கூறுகிறது. சங்க இலக்கியத்தில் பல இடங்களில் கொங்கு நாடுதனி நாடாகக் குறிக்கப்பெறுகிறது கொங்கு புறம் பெற்ற கொற்றவேந்தே என்றும் அவன் கொங்கு நாட்டை வென்று அடிமைப்படுத்திய செய்தியாக அறிய முடிகிறது. அதேபோல் ஒளிறுவாள் கொங்கர் ஆகெழுகொங்கர் நாடு கொங்கர் ஆபரந்தன்ன. வாடாப்புவின் கொங்கர்ஒட்டி போன்ற பாடல் களின் மூலம் கொங்கு இலக்கி யங்களில் அவர்களது வாழ்கை யின் நிகழ்வுகளை அறிய முடிகிறது.



## கொங்கு இலக்கியங்களில் வணிக வாழ்வு

சங்க காலத்தமிழகம் வெளி நாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது போலவே கொங்குநாடும்

அயல் நாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது, சங்கச் செய்யுள்களில் முசிறி, தொண்டி, நறவு, கொற்கை, புகார் முதலிய துறை முகப் பட்டினங்களில் யவனர். முதலியவர்களின் கப்பல்கள் வந்த வாணிகஞ் செய்த செய்திகள் கூறப்படுகின்றன. இது கிரேக்க உரோம் நாட்டவராகியயவனர்கள் எழுதியுள்ள பழைய குறிப்புகளிலிருந்து கொங்கு நாட்டுக்கும் யவன. நாட்டுக்கும் இருந்த வாணிகத் தொடர்பு தெரிகிறது.

தமிழகத்திற்கு வந்த யவனர்கள் ஏற்றுமதி செய்து கொண்டு போன பொருள்களில் முக்கியமானது மிளகு, இதற்காகவே முக்கியமாகப் பெரிய கப்பல்கள் கட்டப்பட்டன என்றும் பொற்காசுகளும் வெள்ளிக்காசுகளும் அனுப்பப்பட்டன என்றும் உரோம நாட்டுச் சரித்திரத்திலிருந்து அறிகிறோம் இச் செய்தியை புலவர் தாயங்கண்ணனார் கூறுகிறார்.

சேரவர்

சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த விளைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி[1] (அகம் 149)

என்ற செய்யுள் மூலம் யவனர்கள் வணிகத்தொடர்பை அறியமுடிகிறது.

மிளகு மூட்டைகளைத் தோணிகளில் ஏற்றிக்கொண்டு போய்க் கடலில் நின்றிருந்த யவன. மரக்கலங்களில் ஏற்றி விட்டு அதற்கு ஈடாக யவனப் பொற்காசுகளைத் தோணிகளில் ஏற்றிக்கொண்டு வந்தார்கள் என்று பரணர் என்னும் சங்கப் புலவர் கூறுகிறார்.

மனைக் குவைஇய கறிமூடையாற்
கலிச்சம் மைய கலக்குறுந்து
கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியாற் கரை சேர்க்குந்து
புனலங்கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்கு கடல் முழவின் முசிறி[2]
(புறம் 343)

யவன மரக்கலங்கள் மிளகை ஏற்றுமதி செய்து கொண்டு போனதை இப்புலவர் நிகழ் காலத்தில் கூறுவதை காண முடிகிறது.

தமிழ் நாட்டுக்கு வந்து பொருள்களை வாங்கிக் கொண்டு போன யவனக்கப்பல் வியாபாரிகள் காசுகளைக் கொடுத்தே பொருள்களை வாங்கிக் கொண்டு போனார்கள் இச்செய்தியைச் சங்கச் செய்யுட்கள் கூறுகின்றன. அக்காலத்தில் பிளைனி என்னும் உரோமா புரி. அறிஞரும் இதைக் கூறியுள்ளார். பரணர்தாம் பாடிய 343 ஆம் செய்யுளில் காண முடிகிறது.

## நாட்டுப்புற விளையாட்டுக்கள் :

கொங்கு நாட்டுப்புற குழந்தைகளைப் பாடும் பறவைகள், ஆடி வரும் பூந்தோட்டங்கள் எனலாம் கள்ளம் கபடமற்ற உள்ளத்தின் சொந்தக்காரர்கள் அவபுகள், வாழ்வின் சுவைகளை எல்லாம் ஒன்று கூட்டி உருச் சமைத்தது போன்று எப்பொழுதும் சோர்வின்றிக் கும்மாளமிடுவர், விளையாட்டு குழந்தைகளின் இயல்பான வளர்ச்சிக்கு இன்றியமையாதது. விளையாட்டின் மூலம் அறிவுப் பயிற்சி இயற்கையாக நிகழ்கிறது. விளையாட்டின் மூலம் படைப்பு ஊக்கம் புகட்டப்படுகிறது. கட்டுப்பாட்டு உணர்வும், ஒற்றுமை பண்பும், பணிவும், மனித நேயமும் உருவாகின்றன.

அழுகின்ற குழந்தையைப் பொக்கை வாய் திறந்து சிரிக்கத் செய்த தாய் குழந்தையோடு விளையாடும் விளையாட்டாகும்.

**சோறு சோறுங்குதாம்**
**(சுண்டுவிரல்)**
**சோத்துக்கு எங்கே**
**போறதுங்குதாம் (மோதிர விரல்)**
**கடன் வாங்கித் தின்னலாங்குதாம்**
**(நடுவிரல்)**
**கடனை ஆருகட்டறதுங்குதாம்**
**(ஆள்காட்டி விரல்)**
**நானே கட்டறேங்குதாம்**
**(பெருவிரல்)**

எனப் பாடுவாள், தாயின் கை பட்ட உணர்வால் அழுகைமறந்து. சிரித்துக் கொண்டிருந்தது குழந்தை.

சிறுவர் சிறுமியர் எதிரெதிரே நின்று, தங்களது கைகளை மாறிமாறிப் பிடித்துக் கொண்டு இருவரது. கால்களும் தொட்டுக் கொண்டிருக்கும் நிலையில் வேகமாகச் சுழன்றாடுவர் அவ்வாறு வேகமாகச் சுற்றச் சுற்றப் பாடலும் துரிதகதியில் பாடப் படும்.

**பிஸ்ஸி பிஸ்ஸாலே**
**பீர்க்கம் பிஸ்ஸாலே**
**கத்தரிக்கா சொத்தெ**
**கடலக்கா மெத்தெ**
**ஏண்டி சரோசா**
**எப்படி கண்ணாலொ?[3].**

என்று பாடிக் கொண்டே சுற்றுவர்.

கொங்கு நாட்டு விளையாட்டுக்களின் கிச்சுக் கிச்சுதாம் பாளம், கண்ணாம்மூச்சி, கரகர வண்டி, நொண்டி, அஞ்சாங்கல், பில்லி, தடிவெரசல், சடுகுடு, தாயம், பல்லாங்குழி, பம்பரம், என வீரம் மலிந்த கொங்குச் சமுதாயத்தின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் விளக்க வல்லன. என்பதை

கொங்கு நாட்டுப்புற விளையாட்டுக்கள் என அறியமுடிகிறது.

## சமூக வாழ்வு:

காதல் என்பது ஆண், பெண் இருவரின் மணமும் இணைந்து, இளமையில் இயற்கையின்

உணர்வுகள் இவ்வுணர்வு எல்லா உயிர்களிடத்தும் அங்கிங் கெனாது எங்கும் கொங்கு நாட்டில் நீக்கமற நிறைந்திருப்பது காண முடிகிறது. இவ்வுணர்வே இனம் அழிந்துபடாமல் காக்கவும், இனம் பெருகதற்கும் உரியது. ஆண் பெண் என்ற தத்துவத்தின் வித்தாகவும் அவற்றின் வாழ்வுக்கும், வளமைக்கும் அடிப் படையாகவும் காதல் விளங்கு வதைக் காணலாம்.

**செம்புலப் பெயல் நீர்போல**
**அன்புடை**
**நெஞ்சந்தாங்கலந்தனவே[4].**

இப்பகுதியில் முன்பின் தொடர்பில்லாத ஆணும், பெண்ணும் காதலில் ஒன்று பட்ட நிலையி்ல் செம்மண் நிலத்திலும் மழைநீர் எவ்வாறு அந்நிலத்து மண்ணோடு கலந்து மண்ணின் நிறத்தினைப் பெறு கின்றதோ அது போன்று, அன்பால் பிணைந்த நெஞ்ச மிரண்டும் ஒன்று கலந்தன என்பது விளக்கப்பட்டுள்ளது.

**வினையே ஆடவார்க் குயிரே**
**வாணுதல்**

**மனையுறை மகளிர்க்கு ஆடவர்**
**உயிர்ண[5].**

என்பதால் பெண்ணிற்கு உயிர் போன்றவர் ஆண் என்பதும் விளக்கும் பெறுகின்றது.

வானம் பொய்ப்பினும் நில வளம் சுருங்கினும் மண்வளம் சுருங்காமல் வாழ்கின்ற நாடு கொங்குநாடு அந்நாட்டுக் கிராமப்புறங்களில் காதல் பாடல்கள் பரவலாக இடம் பெற்றுள்ளன. அத்தை, மகன், மாமன் மகளுக்கு என்று அவர் களுக்கு நினைவு தெரிந்த காலம் முதல் பேசப்பட்டு வந்தது. இருவரும் குறிப்பாகப் பெண் இனிய கற்பனையில் இருந்தாள், திடீரன்று ஒருநாள் வேறொரு ஆடவனுக்குத் திருமணம் செய்யப் பெற்றோர்கள் உறுதி கொடுத்தத்தைப் பார்த்து அவள் உள்ளம் வேதனையில் துடித்தது, அநியாயம்! அநியாயம்! ஏனக் குமுறுகின்றாள்.

**அத்தை மகனுக்குன்னு**
**கனாவுலியும் பொம்பொறந்தே-என்**
**அத்தை மகனெவுட்டு மாலையிட**
**என்னோடே அதியாயம்**
**கொள்ளே கொள்ளெ[6]**

எனக் கூக்குரலிடுகின்றாள்.

காதலால் ஒன்றுபட்ட இருவர் தங்கள் காதலை வெளிப்படுத்திக் கூறாமல் இருக்கின்றார்கள். காதலியை நோக்கிக் குளத்துக்கு அந்தப்பக்கம் இருப்பேன் வா பேசிக்கொண்டிருப்போம் என்கிறான். அவளோ குளத்தில் தண்ணிர் நிற்கிறது எப்படி வரமுடியும் வரவேண்டுமனால்

தங்கக்கப்பல் செய்து அனுப்பு என்கிறாள்.

கொளத்துக்குந்தா ஏலேலோ
அந்தப்பொரம்

கொளத்துக்குந்தா ஏலேலோ
தண்ணீவந்தா
ஏவிதமா ஏலேலோ நா வருவே
தச்சங்கட ஏலேலோ சொல்லச்
சொல்லி
தங்கக்கப்பல் ஏலேலோ செய்யச்
சொல்லி
தடங்கலில்லாமே ஏலேலோ நா
வருவே[7]

எனவரும் பாட்டில் காதலனைத் பாடுகிறாள் கொங்குப் பெண் ணொருத்தி.

கொங்குநாட்டு மக்கள் காதல் உணர்வுகளிலும் பெண்களின் துன்பநிலைகள், குழந்தைகளின், விளையாட்டுகள், பேய் நம்பிக் கைகள், மழை வரும் அறிகுறிகள், பழமொழிகள், பழங்குடியினரின் வாழ்வு ஆகியவை கொங்கு நாட்டுப்புற இலக்கியங்களில் பொதிந்துள்ளவைகளைக் காண முடிகிறது.

## கொங்கு நாட்டுப்புறக் காதல் வாழ்வு:

காதல் என்பது ஆண் பெண் இருவரின் மணமும் இணைந்த, இளமையில் இயற்கையின் உணர்வுகள் இவ்வுணர்வு எல்லா உயிர்களிடத்தும் அங்கிங்கெனாது எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது இந்நிலை கொங்கு நாட்டில் நிறைந்து காணப்படுகிறது. காதல் உணர்வால் உந்தப்பட்ட வர்களுக்குப் பசிதெரியாது, அறு சுவை உணவேயாயினும் சுவைக் காது இனிப்பது கசக்கும் கசப்பது இனிக்கும் துவர்பது புளிக்கும், புளிப்பது, துவர்க்கும், இது காதலின் இயல்பு காதலால் கட்டுண்ட காளையேயாயினும் கன்னியேயாயினும் இந்நிலை மைக்கு ஆட்படாமல் போக முடியாது.

மூன்று மலையிலே கல்லுருட்டி -
புள்ளே
முத்துக் கொடத்திலே பால் காய்ச்சி
குாய்ச்சின பாலும் கசக்குதும்பா
கையுட்ட தேனும் புளிக்குதும்பா
வேப்பங் கொழுந்தும்
இனிக்குதும்பா-புள்ளே
வெள்ளிரிப் பிஞ்சும் கசக்குதும்பா[8]

என்ற பாடலில் காதல் வயப்பட்ட பெண்ணின் வாழ்வு நிலை சுட்டப்படுகின்றது.

## கொங்குப் பெண்களின் நிலை:

ஏட்டில் எழுதப்பட்டுள்ள இலக்கியங்களில் பெண்களின் நிலை பலவாறாகப் போற்றப் படுகின்றது. பெண்ணின் பெருந் தக்கயாவுள என்ற வள்ளுவன் தொடங்கி மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா எனக் கவிமணிவரை, பெண்களைப் பெருமையின் சிகரத்தில் ஏற்றாத வர்களில்லை ஆனால் நடைமுறை

வாழ்வியலில் பெண்ணாகப் பிறந்தல் என்பது கொடுமை யிலும் கொடுமை இதைக் காட்டிலும் மண்ணாகவோ, செடியாகவோ பிறந்திருக்கலாம் அவ்வளவு கொடுமையானது இப்பெண் பிறவி, என கொங்குப் பெண்ணொருத்தி

மாரியம்மன் கோவிலண்டை
மண்ணாப் பொறந்திருந்தா

மாசமொரு புசை வரும்புநான்
பொண்ணாப் பொறந்த
பரும்பாவி ஆனேனே என்றும்
சீத்தா பொறவியிலே செடியா
முளைச்சிருந்தா



செல்லியம்மன் சந்நதிக்குச்
செண்டு மல்லிப்பு எடும்பா[9]

என்று தம் மனக்குமுறலைக் காணமுடிகின்றது.

பெண்களை அடிமைப்படுத்து வது தான் சமுதாயத்தின் சட்டம் என்றும் இந்தக் கொடுமை பெண் செத்தால் மட்டுமே நீங்குவது என்றும் கூறுகிறாள். சமுதாயக் கட்டினையும் அடிமைத் தனத்தையும் எதிர்த்து நிற்க முடியாமல் வாழ்வை முடித்துக் கொள்வதே இந்தப்பாவ பிறப்பி லிருந்து தப்பிக்க வழி எனக் கூறும்

பெண்ணடிமைத் தீர்மானம் போய்
முடிஞசாத் தீருமண்ணே

சண்டாளி தீர்மானம்
தலைமுடிஞசாத் தீருமண்ணே[10]

என்றவரிகளில் பெண் பிறப்பின் துன்பத்தைக் காட்டு கிறது.

முடிவுரை:

கொங்குநாட்டு மக்கள் காதல் உணர்வுகளிலும் பெண்களின் துன்பநிலைகள், குழந்தைகளின், விளையாட்டுகள், பேய் நம்பிக் கைகள், மழை வரும் அறிகுறிகள், பழமொழிகள், பழங்குடியினரின் வாழ்வு ஆகியவை கொங்கு நாட்டுப்புற இலக்கியங்களில் பொதிந்துள்ளவைகளைக் காண முடிகிறது.

●

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மருத நிலத்தில் ஊடல்கள்

**சா. முருகேசன்**.எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.ஐ.சி,பி.எட்.,
முனைவர் பட்டஆய்வாளர் தமிழ், தமிழ்த்துறை,
இசுலாமியாக் கல்லூரி (தன்னாட்சி),
வாணியம்பாடி-635752.

முன்னுரை :

*__ஊ__டலும் ஊடல் நிமித்தமும் மருதநிலத்திற்குரிய ஒழுக்கம் என்பார். இதனால், மருத நிலத்தில் வாழும் தலைவன் - தலைவிப் பற்றி எடுத்து கூறும் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் தோழியின் கருத்துக் களையும் எடுத்து கூறும் ஒழுக்க நிலைகளை ஆராய்வதேயாகும்.*

தூதுசெல்லல் :

*தலைவி என்பவள் வணிகரை விட சிறந்தவனாக கருதப்படும் பாணன் (புலவர்)யிடம் தனது நிலையை எடுத்து கூறி தலைவனுக்கு தூதுகாகச் செல்வதாகும். இதனை,*

கொண்டுழில் பண்டம்

விலையொரீ இக்கொல்சேரி

நுண்டுளைத் துன்னூசிவிற்பாரின் - ஒன்றானும்

வேறல்லைபாணவியலூரன் வாய்மொழியைத்

தேறஎமக்குரைப்பாய் நீ.

(மருதம் - 21)

துறை :

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்து

போதார்வண்டூதும் புனல்வயர் ஊரற்குத்

தூதாய்த் திரிதரும் பாண்மகனே - நீதான் (மருதம் - 22)

*புக்களில் மொய்க்கும் வண்டுகள் சத்தம் வரும் நீர் வளம் மிக்கநன்செய் நிலத்தில் வேலைசெய்யும் மருதநிலத்து ஊர்த் தலைவனுக்கு தூதாக அலையும் பாண! நீஅறிவு கெட்டுப்போய் என் வீட்டுக்கு எதற்காக வந்தாய்? எனகேட்டால் தலைவிபாணனிடம் தலைவன் விரும்பும் பெண் வீட்டுக்கு வழி எது என கேட்டுச் செல்வாயாக! என கூறி அனுப்பினால்.*

துறை :

ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும்

வாரிவளம் குன்றிச் கால்- வான்
திறப்பு - 4

இக்குறள்களில் உழவர்கள் எப்படி மழை பெய்யவில்லை எனில் விளைச்சலை காண முடியாது என்பதை உணர்த்த மருதநிலத்து தலைவன் மேகம் பொழியும் மழைதான் உழவனின் வருவாய் அதுபோல் தலைவன், தலைவியிடம் தனது நல் ஒழுக்கத்தை எடுத்து கூறுவது போல் அமைந்துள்ளது திருக் குறளில் காணப்படுவது போல் தலைவன், தலைவியிடம் மண்வளம் பெருக மழை வளம் வேண்டும் என்பது போல் தூது அனுப்பினான்.

நீர் இன்று அமையாது உலகு
எனின் யார்யார்க்கும்

வான் இன்று அமையாது ஒழுக்கு
வான்சிறப்பு - 10

ஒருவனுக்கு நல்வாழ்க்கை அமைவது அவன் சூழ்நிலை யையும், ஒழுக்கத்தையும் பொறுத்தது. நம் உடலைப் பேணவும், வழிபாடு செய்யவும் தண்ணீர் வேண்டும் என்பதை விளக்குகிறது. மனிதனின் மனத்தில் உள்ள கட்டுப் பாட்டை பொறுத்துதான் அவன் செயல்களில் ஒழுக்கம் அமையும். ஒழுக்கம் என்பது தொடர்ச்சி என்பார். அதனால் தான் மனித சக்தியைக் கொண்டு ஒழுக்கத் தைக் காப்பதே அறிவுடைமை யாகும். அது உயிரைவிடச் சிறந்தது என்பார்.

எனவே தலைவன், தலைவி யிடம் தன் உண்மையான வெளிப்பாடுக்கள் கூடிய செய்தியை மட்டும் கூறினான். உண்மை பேசுதல், சொன்னப்படி நடத்தல், பிறர்மனம் நோகப் பேசாதிருத்தல், அப்படி நடந்து கொள்ளாமல் இருத்தல், புலன் இன்பத்தை விரும்புதல், வரம்புமீறி நடக்காமல் இருத்தல் போன்றவை தொடர்ந்து பின்பற்றுதல் நல்லொழுக்கம்



என்பதாகும்.

இல்வாழ்வான் என்பான்
இயல்புடைய மூவர்க்கும்

நல்ஆற்றின் நின்ற துணை
(இல்வாழ் -1)

எல்லா குடும்பத் தலைவர் களுடன் நட்போடு பழகி அவர்களும் தானும் அறவழி பற்றிச் சிந்தித்து செயல்பட வேண்டும். சமுதாயம், குடும்பத் தலைவர், முதியோர், இளைஞர் போன்றவர்களின் வாழ்க்கை எப்படி வாழ்கின்றனர் என்பதை பொறுத்தே சமுதாய ஒழுக்கம் அமையும். அதனால் தலைவனிடம், தலைவி என்பவர் சமுதாயத்தில்

எப்படி வாழ்கின்றனர் என்ப தனை அறிந்து நல்லொழுக்கம் தன் தலைவியிடம், தலைவியிடம் எடுத்து கூறுவதுபோல் அமை கிறது.

ஆம்பல் அணிந்தழையாரம்
துயல்வரும்
தீம்புன லூரன்
மகளிவனாய்ந்தநறுந்
(மருதம் - 40)

துறை : இந்நிலத்தில் இன்ன பெற்றியாய் வருவாயாகஎனச் சொல்லியது.

தலைவனே! ஆம்பல் பூக்களால் அழகு செய்யப்பட்ட சந்தன பூ மாலையும் அணிந்து வரும் நல்ல நீர்வளம் உடைய மருத நிலத் தலைவனின் மகள் தலைவி நல்லவை என ஆராய்ந்து எடுக்கப்பட்ட மணம் உடைய மலர் நிலமாகும். அதனால் நீல மலரைக் கையில் கொண்டு தாமரை மாலையைச் சூடி இரவு குறியில் வருக! என தோழி தலைவனிடம், தலைவி யின் நிலையை எடுத்து கூறினாள்.

அகன்பணையுரனைத் தாமம்
பிணித்து
இகன்மைகருதியிருப்பன் -
முகனமரா (மருதம் - 42)

தலைவன் பரத்தையரிடம் சென்றான் அவர்களுடன் நீராடுதல் முதலானவற்றில் ஈடுபட்டான். அதனை அறிந்து தலைவி அவனைச் சினந்து கூறுகின்றாள். இதனை மேலும்,

தலைவனுடன் கூடித் தலைவி இல்லறம் நிகழ்த்தினாள். அதனைச் சென்று கண்ட செவிலித் தாய் நற்றாய்க்குஉரைத்தது.

தேங்கமழ் பொய்கை அகவயல்
ஊரனைப்
புங்கண் புதல்வன் மிதித்துழக்
கவீங்குத்
தளர்முலை பாராட்டி என்னுடைய
பாவை (மருதம் - 45)

தோழி, தலைவி தலைவனிடம் கொண்ட ஊடலை நீக்க எண்ணித் தலைவியை இடித்துக் கூறுதல்.

உண்ணாட்டம் சான்றவர் தந்த
நசையாற்று என்று
எண்ணார்க்குக் கண்ணோட்டம்
தீர்க்குது மென்றெண்ணி
வழிபாடு கொள்ளும்
வளவயலூரன்
பழிபாடு நின் மேலது.
(மருதம் - 51)

தலைவன் பரத்தையரிடம் சென்றான். அதனால் புலந்து தலைவி கூறுதல்

வாடாத தாமரை மேல் செந்நெற்
கதிர்வணக்க
மாடா அரங்கினுளாடுவாள் -
ஈடாய (மருதம் - ஊடல் 129)

தலைவன் பரத்தையுடன் கூடி ஒழுகும் புறத்தொழுக்கத்தைத் தலைவிதன் தோழிக்குச் சொல்லுதல்

செங்கட் கருங்கோட்டு எருமை
சிறுகனையால்

அம்கண் கழனிப் பழனம் பாய்ந்து அங்கண்

குவளையம் புவோடுசெங்கயல் மீன் சூடித்

தவளையு மேற் கொண்டுவரும் (மருதம் - ஊடல் 147)

இதனைவள்ளுவரும்

ஒழுக்கம் உடைமைகுடிமை இழுக்கம்

இழிந்தபிறப்பாய் விடும் (ஒழுக்கம் உடைமை 3)

இப்படி வரலாறு படைக்கும் குடும்பத்தில் ஏதாவது ஒரு தலைமுறையைச் சேந்தவர் ஒழுக்கம் குறைவாகவாழ்தல் ஆகும்.

மேலும்,

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்

எய்துவர் எய்தாப் பழி (ஒழுக்கம் உடைமை 7)

எனவள்ளுவர்ஒழுக்கத்தின் நிலையைஎடுத்து கூறுகின்றார்.

இதனால் குற்றத்தைமட்டும் பார்க்காமல், அதைச் செய்தவர் மனநிலை, சூழ்நிலை, உந்துதல் போன்றவை எண்ணிப் பார்க்க வேண்டும். இதனால் தலைவன் செய்த இன்பம் ஒருநாள் தான் நிலைக்கும்.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்

பொன்றும் துணையும் புகழ் (பொறையுடைமை 6)

குற்றத்தை மன்னித்து, திருத்து வதற்கு வழி காட்டுபவரை எல்லோரும் நன்றியோடு நினைப்பார்கள் என்றார் வள்ளுவர் பெருமான்.

ஒத்தஉரிமையளாஊடற்கு இனியளைக்

குற்றம் ஒருஉம் குணத்தளாக் - கற்றறிஞர்ப்

பேணும் தகையளாக் கொண்கண் குறிப்பிறந்து

நாணும் தகையளாம் பெண் (இன்னிலை 32)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

## முடிவுரை

தலைவன் என்பவன் ஊடல் புரியும் போது நல்லொழுகத்தை கடைப்பிடிப்பவனாக இருக்க வேண்டும் எனவும், கூட ஒழுக்கம் தீமையில் முடியும் எனவும், 2,000 ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் எடுத் துரைக்கின்றார். இதனால் மருத நிலத்து தலைவன் காலையில் சென்று வீடு வந்துசேரும் வரை தலைவி என்பவள் ஏங்கிகாத்து கொண்டு இருக்கிறாள். நல் லொழுக்கத்தோடு தலைவன் பரத்தையிடம் சென்றுமீட்டுவ ருமாறு, தோழி, பாணன் போன்ற வர்களிடம் தூது அமைத்து பாடல் வழி விளக்குகிறது என்பதை அறியலாம்.

●

# பொதுமறை உணர்த்தும் பொதுவான மறைகள்

முனைவர் **மோ.ஜ. மகேஸ்வரி,**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சேலம் - 16.

## முன்னுரை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றியது இதில் பதினொரு நூல்கள் நீதி நூல்களாகும். இந்நூல்களில் சிறந்தது திருக்குறளாகும். வள்ளுவர் மனித வாழ்விற்குத் தேவையான அத்துணை அறக்கருத்துக்களையும் இரண்டடியில் பதிவு செய்துள்ளார். இந்நூல் சாதி, மதம், மொழி, இனத்திற்கும் அப்பாற்பட்டு பொதுவான கருத்துகளை எடுத்தியம்புகிறது. இந்நூல் உணர்த்தும் பொதுவான மறைகள் எவை என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## இறைவன்

எந்தச் செயலைத் தொடங்கினாலும் அதற்கு இறைவனை வழிபடுதல் என்பது நம் பழக்கங்களில் ஒன்றாக இருக்கிறது.



இறைவன் இல்லையெனில் இவ்வுலகில் ஓர் அணுவும் அசையாது

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்ற குறள் வழி உலகம் இறைவனை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது என்றும் அனைத்து உயிர்களும் இறைவனது படைப்பு என்பது புலனாகின்றது.

## மழையின் சிறப்பு

மழை பொய்த்துவிட்டது என்றால் நம் வாழ்வும் பொய்த்து

விடும். மழை பொழிய வேண்டும் என்றால் நாம் மரக்கன்றுகளை நட வேண்டும். மழையில்லை என்றால் நாம் சேற்றிலும் கால் வைக்க முடியாது. சோற்றிலும் கைவைக்க முடியாது.

**தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்**

**வானம் வழங்காதெனின்**

என்ற குறள் வாயிலாக வள்ளுவர் தானமும் தவமும் செய்ய மழை அவசியம் என்றுரைக்கிறார். மழை நீரை நாம் சேமித்து வைக்க வேண்டும். நிலத்தடி நீரை குறையாமல் பார்த்துக்கொள்வது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகக் கொள்ள வேண்டும்.

## இல்வாழ்க்கை

இன்றைய உலகில் அன்பு என்பது தேவையான ஒன்ருக விளங்குகிறது. இந்த இல்வாழ்க்கையில் பணமிருந்தால் அன்பு தானாக வருகிறது. பணமில்லையென்றால் அன்பு தானாகவே குறைந்துவிடுகிறது. மனித வாழ்வில் அன்பும் அறமும் குறைந்துவிட்டால் இன்பமும் குறைந்துவிடும். அதனால் தான் வள்ளுவர்,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது**

என்றுரைத்துள்ளார்.

## மக்கட்பேறு

உலகம் விஞ்ஞானத்தில் அதிவேகமாக வளர்ச்சி பெற்று வந்தாலும் பெரும்பான்மையான பெண்களிடம் குழந்தை பேறின்மைமிகுந்து காணப்படுகின்றது. இதற்குக் காரணம் உரம் கலந்த உணவு, கருமுட்டை தானம் செய்தல், காலதாமதமான திருமணம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இன்றைய பெற்றோர்கள் தன் பிள்ளைகள் ஒழுக்கத்தோடும், பண்பாட்டோடும் வளர்கின்றனரா என்று பார்க்காமல் நன்ருகப் படிக்க வேண்டும் நல்ல பணிக்குச் செல்ல வேண்டும் என்று எதிர் பார்க்கின்றனர்.

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்**

**சான்ரேன் எனக்கேட்ட தாய்**

என்னும் குறளிள் வள்ளுவர் தாயின் இன்பம் எதுவென்ருல் தன் மகன் சான்ரேன் என்று கேட்பதில்தான் இருக்கிறது என்கிருர்.

## விருந்தோம்பல்

சங்ககால மக்களின் தலையாய கடமைகளுள் ஒன்ருக விருந்தோம்பும் பண்பு விளங்குகிறது. ஆனால், இன்ரே பொருளாதார நெருக்கடி காரணமாக இல்லத்திற்கு உறவினர்களுக்கு உணவு அளிப்பதையும் முகமலர்ச்சியுடன் வரவேற்பதும் அரிதாகிவிட்டது. வள்ளுவர் விருந்தினர் வைத்துக்

கொண்டு தான் உண்பது என்பது சாவா மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று என்கிறார். இத்தகையப் பண்பு கூடாது என்பதற்கு கீழ் வரும் குறள் எடுத்தியம்புகிறது.

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவான்று**

**சாவாமருள்தெனினும் வேண்டற்பாற்ற**

**ஒழுக்கம்**

இன்றைய காலகட்டத்தில் தனிமனித ஒழுக்கம் குறைந்து வருகிறது. இதற்குக் காரணம் ஊடகங்கள்தான் என்று உறுதி யாகக் கூறமுடியும். கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் போன்றவை பெருகுவதற்கு நவீன கருவிகளின் வளர்ச்சி மேலை நாட்டுத்தாக்கம், இல்லத்தில் அன்பின்மை, பாச மின்மை ஆகியவற்றை குறிப்பிட லாம். ஒருவருக்கு ஒழுக்கம் உயிரை விடச்சிறந்தது என்பதை,

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**

**உயிரினும் ஓம்பப்படும்**

என்கிறார் வள்ளுவர்.

**பிறனில் விழையாமை**

இராமாயணத்தில் இராவணன் இராமனின் மனைவி சீதையை நயந்ததால் அரக்கர் குலமே அழி வதற்கு காரணமாக அமைந்தது. இன்று கள்ளத்தொடர்பு காரண மாக பல குடும்பங்கள் நடுத் தெருவிற்கும் சிறைக்கும் செல் வதை கண்கூடாகப் பார்க்கிறோம். வள்ளுவர்,

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**

**அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு**

என்ற குறளில் பிறர் மனைவி விரும்பி நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறம் மட்டுமன்று ஒழுக்கமாகும் என்கிறார்.

**ஈகை**

கொடையில் சிறந்தவர்கள் கர்ணன் மற்றும் கடையெழு வள்ளல்களாவர். பிரதிபலன் எதிர்பார்க்காமல் இருக்கின்றவர் இல்லாதவர்களுக்குக் கொடுப்பது கொடையாகும். கொடையை தானம் என்று கூறலாம். அன்று புரவலர்கள் புலவர்களுக்கு பொன்னும் பொருளும் நிலமும் தானமாகக் கொடுத்தார்கள். இன்று பல நல் உள்ளங்கள் அன்னதானம், இரத்ததானம், கண்தானம், உறுப்புதானம், குழந்தைதானம் போன்றவற்றை விளம்பரம் இல்லாமல் செய்து வருகின்றார்கள் வள்ளுவர் ஈகை என்பது,

**வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**

**குறியெதிர்ப்பை நீர துடைத்து**

என்றுரைக்கின்றார்.

**புலால் உண்ணாமை**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று எண்ணினால்

புலால் உணவை உண்ணக் கூடாது. மாமிசத்தினால் இரத்த அழுத்தம், கொழுப்பு மாரடைப்பு போன்றவை ஏற்படுகிறது. மேலும், உயிர்பலி நம்மை நரகத்தில் தள்ளிவிடும். கி.பி. இரண்டாம் நூற்றுண்டி லேயே வள்ளுவர் மாமிசம் உண்ணக் கூடாது என தம் குறளில் அறிவுறுத்தியுள்ளார்.

கொல்லான் புலாலை
மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிரும் தொழும்

என்ற குறளில் உயிரைக் கொல்லாமல், புலால் உண்ணா மல் இருப்பவரை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் வணங்கும் என்கின்றுர்.

### நிலையாமை

வாழ்க்கை நிலையில்லாதது. வாழ்வில் ஈடுபடும் மனிதர்கள் நிலையில்லாதவர்கள். இயற்கை யாகிய நிலம், நீர், காற்று, வானம், சூரியன், சந்திரன், மலை போன்றவை நிலையானவை. நம் பிறப்பு இறப்பு பற்றிக் கூறும்பொழுது,

உறங்கு வதுபோலும் சாக்காடு
உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

என்கிறுர். நாம் வாழ்கின்ற காலத்தில் மற்றவர்களிடம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் விட்டுக் கொடுத்தும் வாழவேண்டும். வாழ்வது ஒருமுறை என்பதை மனதில் நினைத்தோம் என்றுல் இல்லத்தில் சண்டை சச்சரவுகள் இருக்காது.

### கல்வி

கல்வி கரையில கற்பவர் நாள்சில என்ற பொன்மொழிக் கேற்ப கல்வியை நாம் வாழ்நாள் இறுதி வரையிலும் கல்வியைக் கற்கலாம். ஆனால், நாம் வாழும் நாளே குறைவு. எல்லாச் செல்வங்களும் அழியக்கூடியது. ஆனால், கல்விச் செல்வமானது அழியாதது. மனிதன் மறையும் வரை கூடயிருப்பது கல்வி என்பதனை,

கேடில் விழுச் செல்வம் கல்வி
ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

என்று வள்ளுவர் குறளில் பதிவுசெய்துள்ளார்.

### நட்பு

சிறந்த நட்புக்கு இலக்கண மாக அதியமான் ஔவையார், கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார், துரியோதனன் கர்ணன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். அன்று நண்பனுக் காக உயிரைக் கொடுப்பவர்கள் இருந்தார்கள். இன்று உயிரை எடுக்கின்ற நண்பர்கள்தான் அதிகம் இருக்கின்றுர்கள். பணம் உள்ளவர்களிடம் நட்பு வட்டம் பெரிதாக இருக்கும். பணமில்லாத வர்களிடம் நட்பு குறைவாக

இருக்கும். நட்பு என்பது சிரித்து மகிழ்வது மட்டுமல்ல. தவறு செய்கின்ற பொழுது இடித்துரைக்க வேண்டும் என்பதனை,

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

எனும் குறள் வழி வள்ளுவர் எடுத்தியம்புகின்றார்.

**கள்ளுண்ணாமை**

வாழ்வினை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்வது மது மாது மாமிசம் ஆகும். அரசு ஒழிக்க வேண்டிய டாஸ்மார்க் கடையை அரசே இன்று நடத்தி வருகிறது. இதனால் படித்த படிக்காத இளைஞர்கள் முதியவர்கள் என எத்தனையோ மக்களின் குடும்பங்கள் சீரழிந்து வருகிறது. கள்ளுண்பவர் பகைவர்களுக்கும் அஞ்சமாட்டார்கள் தம் புகழுக்குப் பழிவந்தாலும் கலங்க மாட்டார்கள். இதனை,

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்

என்று வள்ளுவர் கள்ளுண்பதால் ஏற்படும் தீங்கினை மொழிகின்றார்.

**உழவு**

இந்த உலகில் ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவுமேயில்லை என்றே கூறலாம். நம் நாட்டின் முதுகெலும்பு விவசாயிகள் தான். தமிழ்நாட்டின் நெற் களஞ்சியமாக தஞ்சாவூர் விளங்கியது. ஆனால், இன்றோ மழையின்மை, தண்ணீர்ப் பிரச்சனை, மீத்தேன் எடுத்தல் போன்ற சிக்கல்களால் விவசாயத் தொழில் அழிந்து வருகிறது. கவிஞர் வைரமுத்து விவசாயம் அழிந்து மாத்திரையே உணவாக பயன்படுத்தும் காலம் வரும் என்று கூறியுள்ளார். உழவுத் தொழில் எல்லாத் தொழிலுக்கும் முதன்மையானது என்பதை,

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்
உழந்தும் உழவே தலை

என்ற குறள் வாயிலாக விவசாயத்தின் மேன்மையைச் செப்புகின்றார்.

**நிறைவுரை**

வள்ளுவர் கூறியுள்ள பொது மறை அனைவருக்கும் பொதுவான மறையாகும். இந்நூல் சாதி, மதம் மொழி இனம் கடந்து அனைவருக்கும் பொதுவான மறைகளைக் கூறுகின்றது. மேலே சொல்லப்பட்ட குறள்கள் என்னை செதுக்கியதோடு மட்டுமல்லாமல் அனைவரையும் செதுக்கக்கூடிய நூல் என்று சொன்னால் மிகையாகாது. நாம் வள்ளுவம் கருத்து வழி வாழ்ந்தோம் என்றால் வாழ்வில் இன்பம் பெருகும். துன்பம் விலகும்.

●

# மூதுரை தந்த மூதாட்டி

முனைவர் இ.சா. பர்வீன் சுல்தானா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நீதிபதி பஷீர் அகமது மகளிர் கல்லூரி,
சென்னை.

**ச**ங்க காலத்தில் பெண் புலவர்களில் அவ்வையார் என்ற பெயரில் பலர் இருந்துள்ளனர். இவர்களில் பல்வேறு காலக் கட்டங்களில் வாழ்ந்த நான்கு புலவர்களை குறித்தே நமக்கு தரவுகள் கிடைத்திருக்கிறது.

முதலாவதாக வாழ்ந்த சங்ககால அவ்வையார் தொண்டை நாட்டு மன்னர் அதியமானுக்கு நீண்ட ஆயுளை தரும் நெல்லிக்கனியை தான் உண்ணாது மன்னன் நீண்டநாள் வாழவேண்டும் எனக் கருதி கொடுத்தார் என்பது வரலாற்று குறிப்பு.

இந்த அவ்வையார் சங்க இலக்கியத்தில் 59 பாடல்களைப் பாடியுள்ளார்.

இரண்டாவது அவ்வையார் என்பவர் பாடிய விநாயகர் அகவல் மிகுந்த பக்திச் சுவையுடைய நூல்.

மூன்றாவது அவ்வையார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நீதி நூல்களைப் பாடியவர். இவர் குழந்தைகளுக்காக நீதி நூல்களை எழுதியவர். சிறுவயதில் மனப்பாடம் செய்து கொண்டால், பின் எக்காலத்திலும் பாடலின் பொருளைத் தெளிவாக உணரும் நிலையில் அமைந்தவை மூதுரை.

நான்காவது அவ்வையார் தனிப்பாடல்கள் மிகுதியாகப் பாடியவர். சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று பாடிய அவ்வைப்பாட்டி இவர்.

மூதுரை ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல். பழமையான அறக்கருத்துகளைக் கொண்டிருப்பதால் இது மூதுரை (மூப்பு + உரை) என அழைக்கப்படுகிறது. இதற்கு வாக்குண்டாம் என்ற இன்னொரு பெயரும் உண்டு. இதன் கடவுள் வாழ்த்துப் பாடல் “வாக்குண்டாம்” என்று வழங்கப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது. இந்நூலில் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலும் ஒரு தனிக்கருத்தை வலியுறுத்துகிறது. இனி மூதுரையின் வாயிலாக ஔவை பாட்டி நமக்களித்த பாடல்களையும் அதன் விளக்கத் தையும் காணலாம்.

காலத்தை வென்ற மூதுரை பாடல்களும் சிறு விளக்கமும்:

**கடவுள் வாழ்த்து:**

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்
மாமலராள்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது
– பூக்கொண்டு

**துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமல் சார்வார் தமக்கு.**

இவ்வாழ்த்து பாடலானது,

பூக்களைக் கொண்டு சிவந்த மேனியுடைய விநாயகரது பாதங்களைத் துதிப்பவர்க்கு வாக்குத் திறமையும், நல்ல மனமும், பெருமலரை உடைய இலக்குமியின் அன்பும், நோயற்ற வாழ்வும் கிடைக்கும் என்று எடுத்தியம்புகிறது.

**பாடல் 1:**

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி**
**'என்று தருங்கொல்?' என வேண்டா– நின்று**
**தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்**
**தலையாலே தான் தருதலால்.**

இப்பாடலின் விளக்கம் யாதெனில், ஒருவர்க்கு உதவி செய்யும்போது, அதற்கு ஈடான நன்றி எப்போது கிடைக்கும் என்று கருதி செய்யக்கூடாது. எப்படிப்பட்ட நீரை வேர் மூலம் உண்டாலும், நன்கு தளராது வளர்ந்துள்ள தென்னை மரம் அந்நீரை சுவையான இளநீராக தந்து விடும். அதுபோல ஒருவர்க்கு செய்த சிறு உதவியும் பெரிய விதத்தில் நமக்கு ஒரு காலம் நிச்சயம் நன்மை பயக்கும் என்று மனித நேயத்தை விளக்குகிறார்.

**பாடல் 2:**

**நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மேல் எழுத்துப் போல் காணுமே– அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்**
**நீர் மேல் எழுத்துக்கு நேர்.**

இப்பாடலின் விளக்கம் யாதெனில், நல்லவர்களுக்கு செய்யும் உதவி, கல்லின் மேல் எழுத்தைச் செதுக்குவது போன்றது. அது எவரும் அறியும் வண்ணம் என்றும் நிலைத்திருக்கும். அப்படியல்லாது இரக்க மற்றவர்களுக்கு செய்யும் உதவி எவர்க்கும் பயன்தராது. அது நீரின் மேல் எழுதும் எழுத்துக்களைப் போன்று பயனின்றி நிலைக்காது போகும் என்று எச்சரிக்கிறார்.

**பாடல் 3:**

**இன்னா இளமை வறுமை வந்து எய்தியக் கால்**
**இன்னா அளவில் இனியவும்– இன்னாத**
**நாள் அல்லா நாள் பூத்த நன் மலரும் போலுமே**
**ஆள் இல்லா மங்கைக்கு அழகு.**

இந்த பாடல் தரும் கருத்து யாதெனில், இளமையில் வறுமையும், இயலாத முதுமையில் செல்வமும் பெற்றால் அதை அனுபவிக்க முடியாது. அது பருவமில்லாத காலங்களில் பூக்கும் பூக்களைப் போன்றது. அதைப்போல் துணைவனில்லாத பெண்களின் அழகும் வீணே என தெளிவு படுத்துகிறார்.

**பாடல் 4:**

**அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்**
**நட்டாலும் நண்பு அல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்.**

இந்த எளிய பாடலின் விளக்கம் யாதெனில், நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். நம் நிலை தாழ்ந் தாலும் நற்பண்புள்ளோர் சிறந்தவர் களாகவே பழகுவர். அவர்கள் நட்பு எவ்வளவு காய்ச் சினாலும் சுவை குன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டு சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கினைப்போன்றது அவர் நட்பு என்ற நல்லோர் இலக்கணத்தை அழகுற விவரிக்கிறார்.

**பாடல் 5:**

அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா–தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

இப்பாடலின் விளக்கம்,

கிளைகளோடு கூடிய நீண்ட மரங்களும் பருவத்தில் மட்டும் பழங்களைத் தரும். அது போல மேன்மேலும் முயன்றாலும் நாம் செய்யும் செயல்கள் தகுந்த காலத்தில் மட்டுமே பயன் தரும் என்று பொறுமையின் அவசியத்தை வலியுறத்துகிறார்.

**பாடல் 6:**

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ?–கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும் பாரம்
தாங்கின்
தளர்ந்து விளையுமோ தான்.

என்ற பாடலில் ஔவை எடுத்தியம்புவது,

கல் தூண் ஓரளவுக்கு மேல் பாரத்தை ஏற்றினால் உடைந்து விழுந்து விடுமேயல்லாது, வளைந்து போகாது. அது போலவே மானக்குறைவு ஏற் பட்டால் உயிரை விட்டு விடும் தன்மையுள்ளவர்கள் எதிரிகளைக் கண்டால் பணிவதில்லை என்ற அருங் கருத்தாகும்.

**பாடல் 7:**

நீர் அளவே ஆகுமாம்
நீர் ஆம்பல்; தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு–
மேலைத்
தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற
செல்வம்
குலத்து அளவே ஆகும் குணம்.

இப்பாடல் தரும் விளக்கம் யாதெனில், அல்லிப்பூ நீரின் அளவு எவ்வளவு உயரமோ அவ்வளவே வளரும். நாம் கற்ற நூல்களின் அளவே நம் அறிவு. முற்பிறப்பில் செய்த புண்ய கார்யங்களின் அளவே நாம் இப்போது அனுபவிக்கும் செல்வம். அது போல் நம் குண இயல்பும் நாம் தோன்றிய குலத்தின் அளவே என்கிறார்.

**பாடல் 8:**

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே–நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

இப்பாடலின் கருத்தாவது, நல்லவர்களைக் காண்பதும், நமக்கு நன்மை பயக்கும் அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்கள் குணங்களை மற்றவரி டத்தில் சொல்வதுவும், அவர் களோடு சேர்ந்து இருப்பதுவும் நல்லது என்பதே.

**பாடல் 9:**

தீயாரைக் காண்பதுவும் தீதே; திரு அற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே–தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது.

இப்பாடல் விளக்கம் யாதெனில், தீயவர்களைப் பார்ப்பதும், பயனற்ற அவர் சொல்லைக் கேட்பதும், அவர்களைப் பற்றி அடுத்தவர் களிடத்தில் சொல்வதுவும் அவர்களோடு சேர்ந்து இருப்பதும் நமக்குக் கெடுதியே என்பதாகும்.

**பாடல் 10:**

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி
ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் –
தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

இந்தப் பாடல் வழியே

*அவ்வை சொல்ல வரும் கருத்து யாதெனில், உழவன் நெல்லுக்குப் பாய்ச்சும் நீர் அங்கிருக்கும் புல்லுக்கும் பயனைத் தரும். அது போலவே இந்தப் பழமையான உலகில் நல்லவர் ஒருவர்க்காகப் பெய்யும் மழை (பலன்கள்) எல்லாருக்குமே பயனைத் தரும் என்பதாம்.*

**பாடல் 11:**

**பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்**
**விண்டு உமிபோனால் முளையாதாம் – கொண்ட பேர்**
**ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவு இன்றி**
**ஏற்ற கருமம் செயல்.**

*இந்த பாடல் மூலம், நமக்கு உண்ண பயன் தருவது அரிசியே ஆனாலும், அது உமி இன்றி முளைப்பதில்லை. அது போலவே பேராற்றல் உடையவர்கள் செய்யும் செயலும் அடுத்தவர் துணையின்றி முடிவதில்லை என்று விளக்குகிறார்.*

**பாடல் 12:**

**மடல் பெரிது தாழை; மகிழ் இனிது கந்தம்**
**உடல் சிறியர் என்று இருக்க வேண்டாரூகடல் பெரிது**
**மண்ணீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல்**
**உண்ணீரும் ஆகி விடும்.**

*என்ற பாடலின் மூலம், தாழம்பூவின் மடல் பெரிதாக இருந்தாலும் வாசம் தருவதில்லை. ஆனால் அதனருகிலேயே தோன்றும் சிறு ஊற்று குடிப்ப தற்கும் நல்ல நீரைத் தருகிறது. எனவே உருவத்தை வைத்து ஒருவரை எடை போடக் கூடாது என்று உருவ குறைபாட்டை இகழ்வதை கண்டிக்கிறார்.*

**பாடல் 13:**

**கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்**
**அவையல்ல நல்ல மரங்கள்ரூசபை நடுவே**
**நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய**
**மாட்டாதவன் நன் மரம்.**

*இந்தப் பாடல் மூலம், ஔவை கிளைகளோடும், கொம்பு களோடும் காட்டில் நிற்பவை மரங்கள் அல்ல. சபையின் நடுவே ஒருவர் தரும் ஓலையில் எழுதி யிருப்பதைப் படிக்கத் தெரியாதவனும், அடுத்தவர் மனதை அறியாதவனுமே மரம் போன்றவன் என்று கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.*

**பாடல் 14:**

**கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி**
**தானும் அதுவாகப் பாவித்துரூதானும் தன்**
**பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி.**

*எளிமையான இப்பாடலின் மூலம், அவ்வை நமக்கு தெரி-விப்பது யாதெனில்,*

*காட்டில் மயில் ஆடுவதைப் பார்த்த வான்கோழி உடனே தன்னையும் அதைப் போலவே பாவித்து தன்னுடைய அழகி ல்லாத சிறகை விரித்து ஆடுவதை போன்றதே, கல்வி கற்காதவன் சொல்லும் கவிதையும், அதனால் ஒரு பயனும் இல்லை என்பதேயாகும்.*

**பாடல் 15:**

**வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி**
**ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல்ரூ பாங்குஅழியாப்**
**புல் அறிவாளருக்குச் செய்த உபகாரம்**
**கல்லின் மேல் இட்ட கலம்.**

*இதன் பொருள் யாதெனில்,*

*புலிக்கு நோயைக் குணமாக்கி, விஷத்தைப் போக்கும் மருத்துவன் அதற்கே உணவாவது நிச்சயம்,*

அதைப் போன்றதே நன்றி அறியாத மனிதர்களுக்கு நாம் செய்யும் உதவி. ஆகவே கல்லின் மேல் எறியப்பட்ட பானையைப் போல அந்த உதவியும் நம்மை அக்கணமே அழித்து விடும் என எச்சரிக்கிறாள்.

**பாடல் 16:**

**அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டா–மடைத் தலையில்**
**ஓடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு.**

இந்த பாடலில், நீர் பாயும் தலை மடையில் பல சிறு மீன்கள் ஓடிக் கொண்டிருந்தாலும், கொக்கு வாடியிருப்பதைப் போலக் காத்துக்கொண்டிருக்கும் தனக்குரிய பெரிய மீன் வரும் வரை. அதைப் போலவே அறிஞர்களின் அடக்கமும். அதைக் கண்டு அவர்களை அலட்சியம் செய்து வென்று விட முயலக் கூடாது என்று கூறுகிறாள் ஔவை.

**பாடல் 17:**

**அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்**
**உற்றுழித் தீர்வார் உறவு அல்லர்; –**
**அக்குளத்தில்**
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**
**ஒட்டி உறவார் உறவு.**

இதன் விளக்கம் எதுவெனில்,

குளத்தில் நீர் வற்றிய உடன் விலகிச் செல்லும் பறவைகள் போல, நமக்குத் துன்பம் வந்தபோது நம்மை விட்டு விலகிச் செல்பவர்கள் உறவினர் அல்லர். அந்தக் குளத்திலேயே அப்போதும் சேர்ந்து வாடும் கொட்டி, அல்லி, நெய்தல் கொடிகளைப் போல, நம்முடனேயே நம் துன்பங்களையும் பகிர்ந்து கொள்பவர்களே நம் உறவுஎன்று உறவுகளின் இலக்கணத்தை வகுத்து தருகிறார்.

**பாடல் 18:**

**சீரியர் கெட்டாலும் சீரியரே; சீரியர் மற்று**
**அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகும்?– சீரிய**
**பொன்னின் குடம் உடைந்தால்**
**பொன்னாகும்; என் ஆகும்**
**மண்ணின் குடம் உடைந்தக் கால்?**

இப்பாடல் மூலம், தங்கத்தால் ஆன பானை உடைந்து சிதறினால், அதன் சிதறலும் தங்கமே. ஆனால் மண்பானை உடைந்து போனால்? அதைப் போன்றதே சிறந்த பண்புடையவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உண்டாகும் தாழ்வும். என்ற புரிதலை எளிமையாக விளக்குகிறார்.

**பாடல் 19:**

**ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்**
**நாழி முகவாது நானாழிஞீதோழி**
**நிதியும் கணவனும் நேர் படினும் தம்தம்**
**விதியின் பயனே பயன்.**

இப்பாடல், எவ்வளவு தான் அமுக்கி, பெரும் கடலிலே முகந்தாலும், ஒரு நாழி (படி) அளவுள்ள பாத்திரம் நான்கு படி நீரை முகவாது. நல்ல கணவனும், செல்வமும் நிறைந்திருந்தும் நமக்குக் கிடைக்கும் சுகத்தின் அளவும் அதைப் போன்றதே. அது நம் முன் நல் வினைகளின் அளவைப் பொறுத்தது என்கிறாள் ஔவை.

**பாடல் 20:**

**உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க**
**வேண்டா**
**உடன் பிறந்தே கொல்லும் வியாதி**
**– உடன் பிறவா**
**மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்**
**அம் மருந்து போல் வாரும் உண்டு.**

இப்பாடலின் கருத்து யாதெனில்,

*வியாதி நம்முடனேயே பிறந்து நம்மைக் கொன்று விடுகிறது. எனவே உடன் பிறந்தோர் எல்லாரையும் நம் உறவு என்று நினைக்க முடியாது. உடன் பிறக்காது எங்கோ பெரிய மலையில் இருக்கும் மருந்து நம் வ்யாதியைத் தீர்ப்பது போல, அன்னியரும் நமக்கு நன்மை தருபவராக இருக்கக் கூடும் என்று காட்டுகிறது.*

**பாடல் 21:**

**இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை**
**இல்லாளும் இல்லாளே ஆமாயின் – இல்லாள்**
**வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்**
**புலி கிடந்த தூறாய் விடும்.**

*அதாவது, நல்ல மனைவி ஒருவனுக்கு அமைந்து விட்டால் அந்த இல்லத்தில் இல்லாதது என்று எதுவுமே இல்லை. ஆனால் அந்த இல்லாள் (மனைவி) குணமில்லாதவளாக (இல்லாள்) இருந்து விட்டாலோ, கடுமையான எதிர் வார்த்தைகள் பேசி விட்டாலோ அந்த இல்லம் புலியின் குகை போலாகி விடும் என்று குடும்பவியலை பேசுகிறது.*

**பாடல் 22:**

**எழுதியவாறே தான் இரங்கும் மட நெஞ்சே!**
**கருதியவாறு ஆமோ கருமம்?–கருதிப் போய்க்**
**கற்பகத்தைச் சேர்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்**
**முற்பவத்தில் செய்த வினை.**

*மட நெஞ்சே! திட்டத்தோடு கற்பக மரத்திடம் சென்றாலும், எட்டிக்காயே கிடைத்ததென்றால் அது நம் முன் வினைப் பயனே. விதியில் எழுதியுள்ளபடிதான் நமக்குக் கிடைக்குமே அல்லாது நாம் நினைப்பதெல்லாமா நடந்து விடும்? என்று என்றுரைக்கிறாள்.*

**பாடல் 23:**

**கற்பிளவோடு ஒப்பர் கயவர்; கடும் சினத்துப்**
**பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வாரே – வில்பிடித்து**
**நீர் கிழிய எய்த வடுப் போல மாறுமே**
**சீர் ஒழுகு சான்றோர் சினம்.**

*இதன் பொருள் யாதெனில்*

*சிறு வேறுபாடு வந்தாலே தாழ்ந்தோர் பிளந்து போட்ட கல்லைப் போலப் பிரிந்து விடுவர். பெரும் சினத்தால் பிரிந்தாலும் பெரியோர், பிளந்த தங்கத்தைப் போல மீண்டும் சேர்ந்து விடுவர். அவர்கள் கோபம், ஒருவர் எய்த அம்பால் நீரில் உண்டான வடுவைப் போன்றதே என்பதாம்.*

**பாடல் 24:**

**நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தார் போல்**
**கற்றாரைக் கற்றாரே காமுறுவர் – கற்பிலா**
**மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்**
**காக்கை உகக்கும் பிணம்**

*என்ற பாடலின் மூலம், குளத்தில் பூத்திருக்கும் தாமரையை அன்னப்பறவை சேர்ந்தது போல கற்றவர்களைக் கற்றவர்களே விரும்பிச் சேர்வர்.*

**பாடல் 25:**

**நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்**
**அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு – நெஞ்சில்**
**கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்**
**கரவிலா நெஞ்சத் தவர்.**

*பாடல் செல்லும் நீதி எதுவெனில், தன்னிடம் விஷமிருப்பதை அறிந்து நாகப்பாம்பு மறைந்து வாழும். விஷமில்லாத தண்ணீர்ப் பாம்போ பயமில்லாது எங்கும் வெளியில் திரிந்து கொண்டிருக்கும்.*

**பாடல் 26:**

**மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்**
**மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன்**
**– மன்னர்க்குத்**
**தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை**
**கற்றோர்க்குச்**
**சென்ற இடம் எல்லாம் சிறப்பு.**

இந்த பாடலின் விளக்கம் யாதெனில், ஒப்பிட்டு பார்க்கும் போது, அரசனை விட, கசடறக் கற்றவனே மேலானவன். ஏனென்றால், அரசனுக்கு அவன் தேசத்தைத் தவிர வேறெங்கும் சிறப்பு இல்லை. ஆனால் கற்றவனுக்கோ அவன் செல்லுமிடமில்லாம் சிறப்பு என்று கல்வியின் சிறப்பை உயர்த்துவ தாகும்.

**பாடல் 27:**

**கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார்**
**சொல் கூற்றம்**
**அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம்**
**– மெல்லிய**
**வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே**
**இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்.**

என்ற அற்புத வரிகளில் ஔவை சொல்வது யாதெனில், கற்றறிந்தவர் வார்த்தை கற்காதவர்களுக்கு துன்பத்தைத் தரும். தர்மம் தீயவர்களைத் அழிக்கும், மெல்லிய வாழைக்கு அதன் கன்று அழிவைத் தரும். வாழ்க்கைக்குப் பொருந்தி நடக்காத மனைவி அந்த வீட்டிற்கு அழிவைத் தருவாள் என்ற இல்லற ஒழுக்கத்தை வலியுறுத்துவதாகும்.

**பாடல் 28:**

**சந்தன மென் குறடு தான் தேய்ந்த காலத்தும்**
**கந்தம் குறை படாது; ஆதலால் – தம்தம்**
**தனம் சிறியர் ஆயினும் தார் வேந்தர் கேட்டால்**
**மனம் சிறியர் ஆவரோ மற்று?**

இதன் கருத்துயாதெனில்,

தேய்ந்து மெலிந்திருந்தாலும் சந்தனம் மணம் குறைவதில்லை. அதைப் போலவே தாராள குணம் படைத்த அரசர்களும் தன் பொக்கிஷம் குறைந்த காலத்தும் மனம் மாறுவதில்லை என்று அரசனின் கடமையையும் ஈகையின் சிறப்பையும் கூறுகிறது.

**பாடல் 29:**

**மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல**
**உருவும் உயர் குலமும் எல்லாம் – திரு மடந்தை**
**ஆம் போது அவளோடும் ஆகும்; அவள் பிரிந்து**
**போம் போது அவளோடும் போம்.**

என்ற பாடலின் வழியாக, ஒருவனைச் சூழ்ந்து வாழும் இனிய சுற்றமும், அவனுடைய பெரும் செல்வமும், அவன் அழகும், அவன் குலப் பெருமையும் அன்பும் இலட்சுமி தேவியின் அருள் இருக்கும் வரையில் தான். அவள் அகலும் போது இவையனைத்தும் போய் விடும் என்ற பக்தி ஒழுங்கு நெறியை விளக்குகிறது பாடல்.

**பாடல் 30:**

**சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம்**
**அவரை**
**ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்**
**– மாந்தர்**
**குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து**
**மறைக்குமாம் கண்டீர் மரம்.**


இப்பாடல். இவ்வாறாக, நேற்றைக்கும் இன்றைக்கும் என்றைக்குமான தமிழர்கள் வாழ்வில் மிகச்சிறந்த நெறிமுறை களையும் ஒழுக்கத்தையும் வாழ்வியல் தத்துவத்தையும் விளங்குவதாக ஔவை பாட்டி நமக்கு அளித்த மூதுரை விளங்குகிறது.

# இராமாயணம் உணர்த்தும் வாழ்வியலும் கலைகளும்

**நா. கீதா,**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, அரசுகலைக்கல்லூரி,
சேலம்-7.

**ஆ**யற்கலைகள் அறுபத்து நான்கு - என்பர்.

- இத்தகைய அறுபத்து நான்கு (64) கலைகளில் இசை, கூத்து, சிற்பம், நாட்டியம், நாடகம், ஓவியம், காவியக் கலைகளும் அடங்கும் எனலாம். மக்களது வாழ்வில் கலைகள் முக்கிய



விடத்தைப் பெறுகின்றன. மனிதனது வாழ்வியலையும், கலையையும் பிரித்தறியவியலாதவாறு ஒரு சில கலைகள் இன்றளவும் மக்களது வாழ்வில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்று கூறலாம். இப்படிப் போற்றப் பட்டு வருகின்ற கலைகள் பலவற்றில் இராமாயணக் கதைகளும், கதை நிகழ்வுகளும், இடம் பெற்றிருப்பதைப் பற்றிக் காண்போம்.

**இசைக்கலை:**

இசைக்கலையை இசைத் தமிழ் என்றும் கூறுவர். இசை மிகப் பழங்காலத்திலிருந்தே சிறப்புற்று விளங்கியுள்ளது. காலத்திற்கேற்ப பல மாற்றங் களைப் பெற்று இன்னமும் சிறப்புடன் விளங்கும் நுண்கலை இசையாகும். பண்பட்ட எல்லா இனங்களும்

தத்தமக்குரிய இசை மரபுகளைக் கொண்டுள்ளன எனலாம். இசையைப் பற்றித் தொல்காப்பியம்,

அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
(தொல்காப்பியம்)

என்று குறிப்பிட்டுள்ளது.

## இராமாயணத்தில் இசைக்கலை

சோழர் காலத்து நூலான கம்பராமாயணத்திலும் இசைப் பற்றியச் செய்திகள் இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

## சந்தநயமிக்கப் பாடல்கள்

சந்தநயமிக்கப் பாடல்களைப் பாடுவதில் கம்பர் வல்லவர் எனலாம். பாடல் ஒன்றில், இராமனது கைகளையும், தோள்களையும், மார்பையும் திரும்பவும் கண்டாலன்றி என் உயிர் தாங்காது என்று சீதைக் கூறுவதாக,

நான் உலாவு மேருவோடு நாண் உலாவு பாணியும்
தூண் உலாவு தோளும் வாளி ஊடு உலாவு தூணியும்
(கம்பராமாயணம்)

பாடல் அமைந்துள்ளது. இதில் நாண் உலாவு, தூண் உலாவு என இயைபு வண்ணத்தில் இசையினிமையுடன் அமைந்துள்ளது. தொடர்ந்து இதைப் போன்ற சந்தப் பாடல்களில் கவிஞர் கை வண்ணத்தைக் காட்டியுள்ளார்.

## சீதையின் அழகுருவம்

சீதையின் உருவ அழகு தன்னை வாட்டி வதைப்பதாக இராமன் கூறுகையில்,

கொள்ளை கொள்ளக் கொதித்து எழுபாற்கடல்
பள்ள வெள்ளம் எனப்படரும் நிலா
உள்ள உள்ள உயிரைத் துருவிட
வெள்ளை வண்ணவிடமும் ....
(கம்ப ராமாயணம், 146)

என்று வருணித்துக் கூறுவதாகப் பாடலடிகள் அமைந்துள்ளன. இப்பாடல் சீதையின் மேகலையணிந்த இடை, வாள் போல் கூரிய கண்கள், புன்சிரிப்பு இவை அனைத்தும் தன்னைக் கொல்ல வந்த எமன் என இராமன் கூறுவதாகப் பொருள்பட அமைந்துள்ளது.

மேலும் இப்பாடலில், கொள்ள, பள்ள, உள்ள, வெள்ளை என்ற சொற்கள் எதுகை வடிவில் அமைந்துப் பாடலுக்கு இசையை கூட்டுகிறது என்று கூறலாம்.

## இராமர் உளவெளிப்பாடு

இராமன் சீதையை மனதினால் எண்ணித்தனித்திருந்த வேளையில் சீதையின் உருவம் இராமன் முன் தோன்றுகிறது. இதனை கம்பர்,

கனியும் போல் பவன் கங்குலும் திங்களும்
தனியும் தானும் அத்தையலும் ஆயினான் (மிதிலை - 139)

என்று பாடியுள்ளார். இதில் கங்குலும், திங்களும், தனி, தானும், தையலும் என்ற சொற்கள் இயைபு வண்ணம் தோன்றும்படி இயல்பாகவே இனிய ஓசையுடன் அமைந்தப்பாங்கை அறியலாம்.

### சீதையின் கற்பனை

கருங்கடலும், மழை மேகமும், முழுநீல மலையும், அன்றலர்ந்த காயா, குவளை, நீலோற்பவம், கருநெய்தல் மலர்களும் உவமையாகாத அரிய கரிய நிறத்தை உடைய இராமனை ஒத்த அந்திமாலை சீதையின் உயிரை உண்ண வந்தது என்பதனை,

கடலோ, மழையோ, முழு நீலக்
கல்லோ, காய நறும் போதே
படர் பும் குவளைநான் மலரோ, நீ
லோற்பவமோ, பானலோ

(கம்பராமாயணம், 65)

என்ற பாடல் சுட்டிக் காட்டியுள்ளது. இது வியப்புச் சுவையமைய அமைந்து கவிதைக்கு உயிரூட்டியுள்ளது எனலாம். இவற்றை நோக்குகையில் சொற்களும், ஒலிகளும் மிகுந்து பாடல்கள் மாயாசாலத்தைக் காட்டும் வண்ணம் அமைந்துள்ளன என்பதை உணர்த்துகிறது.

### சீதையின் உள்ளக் குறிப்பு

இராமனை நினைத்து ஆசை என்ற வெம்மையால் வெம்பிய சீதை, மலர்கள் வெம்மையால் வெம்புவதைப் போல தன் மனமும், தானும் கருகிப் போவதாக அமைந்தப் பாடலானது,

புசப்புசப் புலர்ந்து புழுங்கினள்
வீசவீச வெதும்பினள்

(கம்பராமாயணம், 80)

என்பதாகும். இதில் புச, புச, வீச, வீச என்ற சொற்கள் இயைபு வண்ணத்தில் அமைந்து பாடலுக்கு இசையைக் கூட்டு கின்றன எனலாம்.

### உலாப் பாடல்கள்

இராமன் வீதியில் உலா வருவதைக் கண்ட பேதை முதல் பேரிளம் பெண் வரை காதல் கொள்வதாக அமைந்தப் பாடலானது,

மான் இனம் வருவ போன்றும்,
மயில் இனம் திரிவ போன்றும்
மீன் இனம் மிளிரவானில், மன்
இனம் மிடைறு போன்றும்
தேன் இனம் சிலம்பி ஆர்ப்பச்
சிலம்பினம் புலம்பி ஏங்க

என்பதாகும். இப்பாடலில் மான் இனம், மீன் இனம், தேன் இனம், மின் இனம், சிலம்பினம் என அமைந்த சொற்கள் காதல் கவிதையின் முழுவடிவம் பெற்ற இசைப் பாடல் போல அமைவதற்கு காரணமாய் அமைந்துள்ளன என்று கூறலாம்.

### மெய்ப்பாடுகள்

இராமனைக் கண்டு காதல் கொண்ட பெண்களின் மெய்ப்பாடுகளை வருணிக்கும் விதமாக,

களிப்பன, மதர்ப்பன, நீண்டு
கதுப்பினை அளப்ப கள்ளம்
ஒளிப்பன, பெளிப்பட்டு
ஒய்பார்ப்பன சிவப்பு உள்ளூறி
வெளுப்பன கறுப்பு ஆன. . .
(உலா -16)

என்ற பாடல் வெளிப்படுத்து வதாக அமைந்துள்ளது எனலாம். மேற்குறிப்பிடப்பட்ட பாடல்கள் கம்பனது சந்தநய மிக்க பாடலுக்கு சிறப்பு சேர்க்கும் வண்ணம் அமைந்த தாகும்.

இசைக்கலை கலைகளிலே மக்கள் அதிகமாக அறிந்து கொண்டுள்ள கலையாகும். திரைப்படம், வானொலி நிலையம், இசையரங்குகள் முதலியவை பெருகியுள்ள இக்காலத்தில் இசைக்கலை மனிதருடைய வாழ்வியலில் இரண்டறக் கலந்துள்ளது எனின் இதில் வியப்பொன்றும் இல்லையென்றே கூறலாம். இக்காரணங் களினால் தான் இறைவனையும், ஏழிசையாய் இன்னிசையாய் இசைப் பயனாய் தொழுதனர் எனலாம். மற்றும் இறைத் தன்மைப் படைத்த பலரும், இசையால் உம்மைத் தொழுதிட லாமே என்றுக் கூறுவதிலிருந்து, இசைக்கு மயங்கா உயிர்களும் இல்லை. இசைக்கு மயங்கா இறையுமில்லை என்பது இதன் மூலம் தெரிகிறது எனலாம்.

## ஆடல்கலை

இசைக் கலையுடன் தொடர்புடையது ஆடல்கலை. வாயினால் பாடப்பட்ட இசைப் பாட்டுக்கு செந்துறைப்பாட்டு என்றும், ஆடல் கலைக்குரிய பாட்டுக்கு வெண்டுறைப் பாட்டு என்றும் பெயருண்டு. பண்டைக் காலத்தில் 11 வகையான ஆடல் களை ஆடி வந்தார் என்ற குறிப்புள்ளது.

## நாட்டுப்புற ஆடல் கலை

தமிழகத்தில் உள்ள நாட்டுப் புறக் கலைகளாகிய கணியான் கூத்து, ஒயிலாட்டம், தேவ ராட்டம் போன்ற கலைகளிலும் இராமாயண நிகழ்ச்சி இசை வடிவமாகவம், ஆடல்களாகவும் இடம் பெறுகின்றன.

## தெருக்கூத்து நாடகம்

நமதுநாட்டில் நாட்டுப்புறக் கலைகளான தெருக்கூத்து, நாடகம் மற்றும் திரைப்படங் களிலும்கூட இராமாயணக் கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

தெருக்கூத்து வடிவிலும், நாட்டுப்புற வடிவிலும் அமைந்த இராமாயணக் கதைகள் அந்தந்த வட்டாரச் சொற்களையும், வழக்குகளையும் பிரதிபலிப்ப தாகவும் அமைந்துள்ளன. கம்பன் இராமாயணமும், மற்ற இராமாயண இலக்கிய வடிவங் களும் கூறாதுவிட்ட மயில் ராவணன் கதை போன்றவையும் தெருக்கூத்துக்களில் இடம் பெற்றமை குறிப்பிடத்தகுந்தது.

இதிலிருந்து தெருக்கூத்து, நாடகம், திரைப்படம் மூலமாகவும் இராமாயண நிகழ்வு கள் கலை வடிவம் பெற்று மக்களிடையே வளர்ச்சியடைந்து வருகின்றன என்பதை அறிய முடியும்.

**ஓவியக்கலை**

ஓவியத்திற்கு சித்திரம் என்றும் பெயருண்டு. தமிழகத்தில் பெரும்பான்மை சுவர் ஓவியங் களாக இருந்தன. சிறுபான்மை துணிச் சீலைகளிலும் எழுதப் பட்டன. இத்தகு ஓவியங்களும் இராமாயணச் செய்தகிளையும், நிகழ்வுகளையும் வெளிப்படுத்து வனவாக விளங்குகின்றன.

**பரங்குன்றத்துச் சுவர் ஓவியம்**

திருப்பரங்குன்ற சித்திர மாடத்தில் வரையப்பட்டிருந்த சித்திரங்களில் காமன், கிரதி, அகலிகை, இந்திரன், கௌதம முனிவன், புனை உருவம் கொண்ட இந்திரன் போன்ற இராமாயணக் கதாபாத்திரங் களின் ஓவியங்கள் காட்சியளிக் கின்றன. இதனை,

> **கிரதி காமன் இவள் இவள் எனாஅ**
> **இந்திரன் புசை இவள் கலிகை**
> **இவன் (பரிபாடல் 19-48-53)**

**இராமாயண ஓவியங்கள்**

இராமாயண கதை நிகழ்ச்சி கள் ஓவியமாகத் தீட்டப்பட்டு தமிழகத்தில் பலவிடங்களில் காணப்படுகின்றன.

மதுரையில் அழகர் கோயில் வசந்த மண்டபம், இராமனாத புரத்தில் இராமலிங்க விலாசம் அரண்மனை, திருச்சியில் ஸ்ரீ ரங்கம் ேர்காயில் ஆகிய இடங் களிலும் மற்றும் தமிழகத்தில் ஊர்த் தெய்வங்கள் இடம் பெற்றிருக்கும் கோயில்களிலும் கூட இராமாயண ஓவியங்கள் வரையப் பெற்றுள்ளன என்பர். இக்குறிப்புகளிலிருந்து இதிகாசங் களும் ஓவியக் கலைவடிவில் மக்களிடையே செல்வாக்குப் பெற்று வளர்ந்துள்ளது என்பதை அறியலாம்.

**கோயில் கலை**

மிகப்பழைய காலத்திலே நமது நாட்டுக் கோயில் கட்டிடங் கள் மரத்தினால் அமைக்கப் பட்டன. பிறகு, செங்கல் சுண்ணாம் பினாலும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. இதன்பின் குகைக் கோயில்கள் உருவாகின என்பர். இராமர், விஷ்ணுவின் அவதாரமாகக் கருதப்பட்ட பின்னர் அவர் மக்களின் வழிபடு தெய்வமானார், அவருக்கென பல கோயில்கள் எழுந்துள்ளன. மேலும் அனுமனுக்கும் கோயில் கள் எழுப்பப்பட்டுள்ளன. இத்தகு கட்டிடக் கலையும் மக்களது வாழ்வில் பெரும்பங்கைப் பெற்றுள்ளன.

**காவியக் கலை**

கம்பனுடைய செய்யுள் தெளிவும், நுட்பமும் உடைய

தாகவுள்ளன. ஓரிடத்தில் இராமனும், இலக்குவனும் கோதாவரியாற்றை நோக் குகையில் அந்த ஆறுனது, கவிஞருடைய செய்யுள்போல, அகலமும், ஆழமும், அழகும், தெளிவும், இன்பமும் கொண்ட வையாக ஓடிக் கொண்டிருப்பது போல் கற்பனை செய்த கம்பன்,

**புவியினுக் கணியாய் யான்ற**
**பொருள் தந்து புலத்திற்ருகி**
**கவியகத் துறைகள் தாங்கி**

என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடலில் ஆற்றுநீரையும், கவிதையையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளப் பாங்கு புலனாகிறது. மனதில் சிந்தித்து அறிவுக் கண் கொண்டு இதை அறிவதாலேயே கலைகளில் காவியக் கலை நுட்பமானது என்று கூறப்படுகிறது. காவியக் கலையும் காலந்தோறும் மக்களிடையே வளர்ச்சியடைந்து வருகின்றன என்பதை அறியலாம்.

### இலக்கியக் கலை

தமிழர் தொன்றுதொட்டு இலக்கியக் கலையை வளர்க்கிறுர்கள். திராவிடர் மிகப் பழைய இலக்கியங்களைக் கொண்டிருப்பவர்கள் தமிழர் இலக்கியங்களை,

1) சங்க கால இலக்கியம்

2) இடைக்கால இலக்கியம்

3) பிற்கால இலக்கியங்கள்

எனப் பிரித்தனர். இவ் விலக்கியங்கள் மக்களது வாழ்வைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகும்.

இவ்விலக்கியங்களிலும் இராமாயணக் கதைகளும், கதை நிகழ்ச்சிகளிலும் இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

### வாழ்வியலும் கலையும்

பண்டைக் காலத்தில் மக்களது வாழ்வியலும், கலைகளும் பிரிக்க முடியாதபடி ஒன்றிணைந்து இருந்தன. இக்காரணங்களினால் பழங்கால மக்கள் கலைகளைப் பெரிதும் போற்றி வாழ்ந்தனர்.

இன்றைய மனித வாழ்விலோ ஒருசில கலைகளைத் தவிர மற்ற கலைகள் அழிந்த நிலையிலும் மக்கள் பல கலைகளைப் பற்றி அறியாத நிலையிலும் வாழ்கின்றனர். அப்படிப்பட்ட மக்களுக்கு கலைகளைப் பற்றியும், கலைகளின் இன்றியமையாமையைப் பற்றியும் அறிவுறுத்துவதாக மேற்குறிப்பிட்ட இராமாயணக் கலைகளும், கதை நிகழ்வுகளும் அமைகின்றன என்று கூறலாம்.

கலை கலைக்காக என்பதை விட மகிழ்ச்சியான மன நிலையுடன் கூடிய மக்களது வாழ்விற்கே கலைகள் என்பதை மேற்கண்டவற்றிலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

●

# கொங்கு நாட்டு வைப்புத் தலங்கள்

து.பிரேமா,
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி),
சேலம் - 7

**வை**ப்புத் தலங்கள் என்பது பாடல் பாடிய நாயன்மார்கள் ஒரு தலத்தில் பாடலைப் பாடிக் கொண்டே அவர்கள் செல்ல முடியாத தலத்தின் இறைவனை நினைத்து ஊர்ப் பெயரைப் போற்றிப் பாடும் தலங்கள் வைப்புத் தலங்கள் ஆகும். தேவாரம் பாடல் பெற்றத் தலங்கள் இல்லாமல் வைப்புத் தலங்கள் என்று சிலவற்றை குறிப்பிடுகின்றனர். அவ்வைப்புத் தலங்களைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கொங்கு நாடு

தமிழக வரலாற்றில் கொங்கு நாடு தனித்தன்மை பெற்றதாக முற்காலந்தொட்டே சிறந்து விளங்கி வருகிறது. பண்டைத் தமிழ்நாடு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம், கொங்கு மண்டலம், தொண்டை மண்டலம் என்பனவாம்.1 என்று நிலப்பாகுபாட்டில் அமைந்த தன்மையை புலவர் குழந்தை அவர்கள் விளக்கியுள்ளார்.

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு தனித்த சிறப்புக் கூறும், பழங் குறிப்பும் உண்டு.

சோழ நாடு சோறுடைத்து
பாண்டிய நாடு முத்துடைத்து
சேர நாடு வேழமுடைத்து
கொங்கு நாடு ஆவுடைத்து
தொண்டை நாடு
சான்றோருடைத்து2

என்கிறார். இவ்வடிகளிலிருந்து தமிழகம் மூன்று நாடுகளாகக் கூறப்பட்ட போதும் கொங்குப் பகுதியும் ஒரு நாடாகவே கருதப் பட்டு வந்தது என்பதை அறிய முடிகிறது.

## தென் கொங்கு நாடுகள்

கோவை, பல்லடம், ஆகிய வட்டங்களின் தென் பகுதி

களும், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, தாராபுரம், கரூர், குளித்தலை, பழனி, திண்டுக்கல் வட்டங்களை தென் கொங்கு நாடுகளாகப் பிரித்துள்ளனர்.

**வடகொங்கு நாடுகள்**

வடகொங்கு என்பது கோவை, பல்லட வட்டங்களின் வடக்குப் பகுதிகளும், அவினாசி, கோபி, பவானி, ஈரோடு, சேலம், நாமக்கல் முதலான வட்டங்களும் ஆகும்.

கொங்கர்கள் ஆட்சி செய்த பகுதிகள் கொங்கு நாடு எனப்பெயர் பெற்றது.

தமிழ் மண்டிலம் ஐந்து

எனும் திருமந்திரத்தின் வரியின் மூலம் தமிழகம் ஐந்து மண்டலங்களாக பிரிக்கப் பட்டிருந்தது. அவற்றில் கொங்கு மண்டலம் தனிநாடாக இருந் தமைக்குச் சான்றுக,

ஆகெழு கொங்கர் நாடு
ஐபதிற்று.22:15



என்னும் பதிற்றுப்பத்தில் பல்யானை செல்கெழு குட்டு வனைப் பாலைக் கௌதமனார் பாடல் வரியின் மூலம் கொங்கு மண்டலம் தனிநாடாக இருந்தது என்பதை அறிந்துக் கொள்ள முடிகிறது. கொங்கு மண்டலத்தின் எல்லையை குறிப்பிடுகையில்,

வடக்குப் பெரும்பாலை வைகாவுர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்
கழித்தண் டலைமேவுங் காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையளவு கொங்கு.
ஐகொங்கு மண்டல சதகம், ப-5

என்னும் பாடல் மூலம்,

வடக்கு - பெரும்பாலை

தெற்கு- வைகாவுர்

கிழக்கு - குளித்தலை

மேற்கு- வெள்ளிமலை

கொங்குநாட்டு எல்லையை கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகிறது. கொங்கு நாடு கோவை, நீலகிரி, சேலம், தருமபுரி மாவட்டங்களும், பழனி, திண்டுக்கல், கரூர், குளித்தலை, கொள்ளேகால் ஆகிய சில பகுதிகளும் பழைய எல்லை பகுதிகளாக இருந்த மையை இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**கொங்கு நாட்டுத் தலங்கள்**

கி.பி. ஆறு, ஏழாம் நூற்றண்டு களில் திருஞான சம்பந்தர்,

திருநாவுக்கரசர், சுந்தரர் போன்ற நாயன்மார்கள் இறைவனை நினைத்து பாடல் இயற்றி யுள்ளனர். அப்பாடல்களே பக்தி இலக்கியங்களாக போற்றப்படு கிறது. நாயன்மார்கள் ஒவ்வொரு திருத்தலங்களாகச் சென்று இறைவனைப் போற்றிப் பாடி யுள்ளனர். அத்தகைய போற்றிப் பாடல்கள் கொங்கு நாட்டிலுள்ள சிவத்தலங்களையும் பாடப் பட்டுள்ளமையை,

புரைக்காடு சோலைப்புக் கொளியுர் அவிநாசியே
ஐசுந்தரர்-7-92-4:3ஸ

இவ்வரிகளின் மூலம் அறிய முடிகிறது. மூவர் முதலிகள் பாடிய தேவாரத்தில் கொங்கு நாட்டுத் தலங்களாக ஏழினை குறிக்கப்படுகின்றது.

1. அவிநாசி - சுந்தரர்
2. திருமுருகன் புண்டி - சுந்தரர்
3. திருநணா - சுந்தரர்
4. திருச்செங்கோடு - சம்பந்தர்
5. கொடுமுடி - அப்பர், சம்பந்தர், சுந்தரர்
6. கரூர் - சம்பந்தர்
7. வெஞ்சமாக்கூடல் - சுந்தரர்

## அவல் புந்துறை

அவல் புந்துறை ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இறைவன்-புஷ்பவனேசுவரர், இறைவி-பாகம்பிரியாள். இறைவிக்கு தனிக்கோயில் அமைந்துள்ளது. மேலும் விசாலாட்சி என்ற பெயரிலும் தனி சந்நிதியாக அமைந்துள்ளது என்பது அறியமுடிகிறது. சுப்பிரமணியர், நடராச சபை, உற்சவ மூர்த்தங்கள், நவகிரகங்கள், சனீசுவரர், பைரவர், தான் தோன்றீசுவர லிங்கம், தர்ம சம்வர்த்தினி, சுரியன், சந்திரன் போன்ற தெய்வங்களும் சுற்றுப் பிரகாரத்தில் அமைந்துள்ளது. தலத்தின் சிறப்பாக புந்துறைப் புராணம் என்ற புராண நூலை காளியண்ணப்புலவர் எழுதி யுள்ளார். அப்புராணம் சில ஆண்டுகளுக்கு முன் வெளியிடப் பட்டிருக்கிறது. திருநாவுக்கரசர் திருத்தாண்டகப் பாடலின்,

குயிலாலந்துறை சோற்றுத்துறை புந்துறை

பெருந்துறையும் குரங்காடு துறையினோடு

திருநாவுக்கரசர்-6-71:11

இவ்வரிகளின் மூலம் புந்துறை என்ற தலத்தை குறிப்பிட்டுள்ள தை அறிய முடிகிறது. இதே போன்று புந்துறை என்றப் பெயர் பாண்டி நாட்டுத் தலத்தில் ஒன்றுக இருந்து வருகிறது.

## ஏழூர்

ஏழூர் தலம் நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள இறைவன் கைலாச நாதர். இவ்வுர் கட்டியண்ணன் என்ற குறுநில மன்னன் காலத்தில் ஏழு ஊர்களுக்குத்

தலைமையாக இருந்த ஊர் என்பதை,

ஏழூர் நாட்டில் இருநூறு ஆண்டு கால அளவில் கட்டியண்ணன் என்ற ஒரு தலைவன் இருந்தான். தன் முயற்சியாலும், அறிவாற்ற லாலும் ஏழூரின் ஆட்சி அதிகாரியாக விளங்கினான். தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் புரவலனாக விளங்கினான்.

ஐஏழூர் நாடு வரலாறு மலர், நாள்:10-11-2007

இவ்வரிகளின் மூலம் அறிய முடிகிறது. தற்போது ஏளர் என்று மருவி அழைக்கப்படு கிறது. கோயிலின் முன் உள்ள கல் தம்பத்தில் நாற்புறமும் சிவலிங்கம், தட்சிணாமூர்த்தி, நந்தி, துர்க்கை ஆகிய உருவங் கள் செதுக்கப்பட்டுள்ளன. இறைவன் ஐந்து அடி உயர முள்ள பெரிய திருமேனியுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கருர். இத்திருத்தலத்தில் அம்மன் சந்நிதி காணப்படவில்லை. மேலும் சுரியன் வலம்புரி விநாயகர், நாகதேவதை, பஞ்சலிங்கம், பாலமுருகன், நவக்கிரகம், பைரவர், சந்திரன் ஆகிய சந்நிதிகள் பிரகாரச் சுற்றில் அமைந்துள்ளது. திருநாவுக்கரசரின் ஆறும் திரு முறை பாடல்.

இடும்பாவனம் எழுமூர் ஏழூர்
தோழூர்
திருநாவுக்கரசர்-6-70:5

வரியின் மூலம் ஏழூர் தலத் தினை குறிப்பிட்டிருக்கிறார். இத்தலத்தில் பழைய கல்வெட்டு ஒன்று காணக்கிடக்கிறது.

## குமரிங்கொங்கு

இத்தலம் கொங்குகுமரித் துறை, மோகனூர் எனவும் அழைக்கப்படுகிறது. நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இறைவன்-அசலதீபேசுவரர், இறைவி-மதுகரவேணி. தீர்த்த -காவிரி, தலவிருட்சம்-வில்வம். இத்தலத்தில் இறைவனுக்கு முன்னிலுள்ள தீபம் காற்றடித் தால் அசைவதில்லை. அதனை யொட்டி இறைவனுக்கு அசலதீபேசுவரர் என்ற காரணப் பெயர் அமைந்துள்ளதாகத் தெரி கிறது. இத்தலத்தினைப் பற்றி அறிஞர்கள் குறிப்பிடுகையில்

இத்தலத்தின் பெயர் குமரிங் கொங்கு என்று தமிழறிஞர் கி.வா.ஜெகந்நாதன் அப்பர் சேத்திரக் கோவையை அடிப் படையாகக் கொண்டு தமது ஆய்வில் குறிப்பிட்டிருக்கிருர் என்றும், டாக்டர் உ.வே.சா தனது ஆராய்ச்சியில் மோகனூர் சிவபெருமானுக்கு குமா°சர் என்ற பெயர் உள்ளதால் இவ்வுர் மோகனூராக பெயர் பெற்றது.

ஐசைவ சமயக் கலைக் களஞ்சியம்
தொ-ப, ப-176

எனும் இவ்வரிகளை சைவ சமயக் கலைக்களஞ்சியம்

குறிப்பிடுகின்றது. இத்தலத்தின் இறைவன் திருவடியில் ஊறு கின்ற சிறிய நீருற்று காவிரியில் சென்று கலப்பதாகச் சொல்லப் படுகிறது. இறைவன் சுயம்பு மூர்த்தியாக காட்சியளிக்கிறார்.

இத்தலத்தில் நாயன்பார்கள் சந்நிதி 32 மட்டுமே காணப் படுகிறது. பஞ்சலிங்கங்களுக்குப் பின்னால் கற்சுவரில் வராகி, வைஷ்ணவி, சாமுண்டி ஆகிய மூன்று உருவங்கள் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இத் தலத்தைப் பற்றி திருநாவுக்கரசர் பாடலின்,

குருகாவுர் வெள்ளடை
குமரிகொங்கு
திருநாவுக்கரசர்-6-70:9



இவ்வரியின் மூலம் குமரி கொங்கு என்றுக் குறிப்பிடப் பட்டுள்ளதையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இத்தலத்திற்கு சற்று அருகே வைணவ தலமும் அமைந்துள்ளது. அத்தலத்தில் கோபாலகிருஷ்ணனுக்கு தனி சந்நிதிக் காணப்படுகிறது. கோபாலகிருஷ்ணன் ஆண் பாதி, பெண் பாதியாக காட்சித் தருகிறார்.

## குரக்குத்தளி

குரக்குத்தளியை தற்கால்தில் சர்க்கார் பெரியபாளையம் எனவும் அழைக்கப்படுகிறது. இறைவன்-சுக்ரீசுவரர், இறைவி - ஆவுடைநாயகி. ஈரோடு மாவட்டத்தில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. சுக்ரீவன் வழிபட்டதால் சுகரீசுவரர் என இறைவன் அழைக்கப்படுகிறார். இங்குள்ள கல்வெட்டில் இறைவன் பெயர் ஆளுடைய பிள்ளை என்று குறிக்கப் பட்டிருக்கிறது. இத்தலத்தின் சிறப்பாக உடம்பில் மரு உள்ளவர்கள் இறைவனுக்கு மிளகைப் படைத்து அம்மிளகை எட்டு நாட்களுக்கு உணவில் சேர்த்து உண்டு வந்தால் மருக்கள் மறைந்து விடும் என்பதும் நம்பிக்கையாக காணப்படுகிறது. திருவாதிரை நாள் வழிபாட்டில் மிளகு ஒரு

வழிபாட்டுப் பொருளாக இடம் பெறுகிறது. இத்தலம் ஏறக்குறைய 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இத்தலத்தில் உத்தாராயணமும், தட்சிணாயணமும் சந்திக்கும் காலத்தில் சிவலிங்கத்தின் மீது சுரிய ஒளி படுகிறது என்ற சிறப்பும் அமைந்துள்ளது. இத்தலத்தினை சுந்தரர் தம் பதிக பாடலின்,

**கொம்பிற் குறும்பிற் குரக்குத்**
**தளயாய்..**
**சுந்தரர்-7-47:2**

இவ்வரிகளின் மூலம் குரக்குத்தளி எனும் பெயரை குறிப்பிடுகின்றூர் என்பதை தேவார பாடல் உணர்த்துகின்றன.

### மாட்டூர்

இத்தலத்திற்கு சேவுர் என தற்காலப்பெயர் அமைந்துள்ளது. இறைவன் - வாலீசுவரர், இறைவி - தர்மசம்வர்த்தினி. ஷைபதேவர் வழிபட்ட தலம் ஆதலால் மாட்டூர் என்ற பெயர் உருவாயிற்று எனலாம். காளையை சேங்கன் என்றும் சே என்றும் தொல்காப்பிய மரபியல் நூற்பாவின் மூலம் அறிய முடிகிறது. அதனையொட்டி சேவுர் என்றும் பெயர் உருவாயிற்று. இத்தலக் கல்வெட்டில் சேவுரான செம்பியன் கிழானடி நல்லூர் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. வாலி வழிபட்ட தலம் ஆதலின் கொடி மரத்தில் குரங்கு வழபடுவது போன்ற சிற்பம் இருப்பது இத்தலச் சிறப்புக்கு சான்றுகும். மேலும் பேரூர் ஆதீனம் தலைமையில் வழிபாட்டு மன்றம் உருவாக்கப்பட்டு உதவிகள் செய்யப்படுகிறது. இத்தலத்தை சுந்தரர் தம் பதிகத்தில் குறிப்பிட்டிருக்கிறூர்.

**மாட்டூர் அறவா மறவாது**
**உன்னைப் பாடப் பணியாயே**
**சுந்தரர்-7-47:1**

இத்தலங்களோடு கொல்லிமலை, தகட்டூர், தீர்த்தமாமலை, தோளர், பரப்பள்ளி, பேரூர், மயிண்டீச்சரம், மூலனூர், மொக்கணீச்சுரம், கொடுங்கோனர் போன்ற தலங்கள் கொங்கு நாட்டு வைப்புத் தலங்களாகும்.

### முடிவுரை

கொங்கு நாட்டில் தேவாரத் தலங்கள் என்று ஏழுத் தலங்களை அனைவராலும் குறிப்பிடப்படுகிறது. வைப்புத் தலங்களும் கொங்கு நாட்டில் அமைந்துள்ளது பற்றி பெரும்பான்மை குறிப்பிடப்படுவதில்லை. தேவாரத் தலங்களுக்கு உள்ள பழமையும், தனி சிறப்பும், பெருமையும் வைப்புத் தலங்களும் பெற்றுள்ளன.

●

# தல புராணங்கள்

**முனைவர். ப.தமிழரசி,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,


**பு**ராணம் என்பது தமிழர் வாழ்வில் இன்றியமையாத ஒன்று என்றால் மிகையில்லை. புராணம் என்றால் கட்டுக்கதை என்ற கருத்து மக்களிடையே நிலவுகிறது. புராணம் என்பது பழைய வரலாறு என்று பொருள் படும். இன்றும் மக்களிடையே தொன்று தொட்டு நிலவி வருகிறது. புராணம் என்றவுடன் அது கடவுளைப் பற்றிய கதை என்றுதான் மக்களால் நம்பப்படு கிறது. புராணங்கள் எப்போதும் சமயங்களோடு இணைத்தே சொல்லப்பட்டு வருகிறது.

புராணம் - விளக்கம்

பழமையான எந்த வரலாறு களும் இன்றும் கூட மக்களிடை யே சொல்லப் பெற்று வருகிற தோ அவை புராணம் ஆகும். புராணம் என்ற சொல் கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது. புராணத்திற்கிணையாக ஆங்கிலத்தில் ஆலவா என்ற சொல் கூறப்படுகிறது. ஆலவாழள என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து அச்சொல் பிறந்தது. தொடக்க காலத்தில் நாகரிக வளர்ச்சி இல்லாத நிலையில் வாழ்ந்த மக்கள் தங்கள் விளக்கத்திற்காகக் கற்பித்த கற்பனைக் கதைகள் புராணங்கள் எனலாம். புராணம் என்றாலே பழமையானது என்று பொருள். கடவுள் மற்றும் சடங்குக் கூறுகளின் தொடர்பு புராணங்களில் இடம் பெறு வதால் சமயச் சார்பும் புராண நம்பிக்கையும் புராணங்களில் இடம் பெற்றன. புராணங்கள் தமிழில் தோன்றியவை அன்று. வட மொழியிலிருந்து தழுவப் பட்டவை. பெரிய புராணம் மட்டுமே தமிழ்நாட்டில் தோன்றிய தமிழ்ப் புராணம் ஆகும்.

இத்தகைய புராணங்கள் மக்களிடையே இறை வழி பாட்டுணர்வை ஏற்படுத்தின.

புராணக் கதைகள் கேட்பதன் மூலம் மக்கள் தவறுன வழியில் செல்லப் பயந்தனர். தவறு செய் பவர்க்குத் தண்டனை நிச்சயம் என்ற கருத்து மக்களிடையே வேரூன்றி இருந்தது. நல்ல காரியங்கள் செய்தால் வாழ்வில் நல்ல பலன்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருந்தது. இதனால் மற்றவர்களுக்கு உதவும் மனநிலை ஏற்பட்டது. தெரியாமல் செய்யும் தவறு களுக்கு இறை வழிபாட்டால் தீர்வு கிடைக்கும் என நம்பினர்.



## தமிழில் தலபுராணங்கள்

பழமையை இலக்கியப் பொருளாகக் கொண்டு அமையும் இலக்கிய வகை குறித்துத் தொல்காப்பியரும் குறிப்பிடுகிறுர்.

அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயையே புலனே
இழைபெனாஅப்
பொருந்தக் கூறிய
(தொல்.பொருள் 1259)

புராணம் என்பது பழைய மரபு என்ற பொருளில் வழங்குவ தால் பழைய இலக்கிய இலக்கண மரபுகளையும் புராணமெனத் தமிழர் வழங்கியது உண்டு. புராணங்களில் தமிழ் மொழி யிலுள்ள புராணங்கள் வேருகவும், வட மொழியில் உள்ள புராணங் கள் வேருகவும் காணப்படு கின்றன. தமிழில் முதன் முதலில் மணிமேகலையில் தான் புராணம் என்ற சொல் இடம் பெற்றுள்ளது. திருவாசகம், சிவபுராணம் என்பதற்கு சிவனது அநாதிமுறைமை எனப் பொருள் தரும். சிவனடியார் வரலாறு கூறும் திருத்தொண்டர்மாக்கதை பெரியபுராணம் எனப்பட்டது. வடமொழிச் சாயலில் தோன்றிய வை திருவிளையாடற் புராணம் மற்றும் கந்தபுராணம் ஆகும்.

## தலபுராணங்கள் வழங்கக் காரணங்கள்

ஒரு தலத்தில் உள்ள கடவுளை வழிபட்டு பயன் பெற்றவர்கள் அவற்றின் வரலாறுகளைத் தொகுத்துக் கூறும் புராணம் தல புராணம் எனப்படும். தல புராணங்களில் நல்ல நோக்கத் துடன் பண்பாடு, ஒழுக்கம் பற்றிய கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டன. தல புராணங் களில் தலத்தின் பெருமைகள் குறித்துக் கூறப்பட்டன. மூர்த்தி, தீர்த்தம், தலமரங்கள் போன்றவை சிறப்பித்துக் கூறப்பட்டன. மடங்கள் வளர்ச்சி பெற்ற காலத்தில்

தலபுராணங்கள் மிகுதியாக எழுந்தன. பல புராணங்கள் கடவுளைப் பற்றியதாக உள்ளன. சில தல புராணங்கள் வடமொழி யில் எழுதப்பட்டு பின்னர் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. பெரிய புராணம், சேக்கிழார் புராணம், அருணகிரி நாதர் புராணம் போன்றவை அடியார் வரலாற்றினை ஒட்டி அமைவன. பிற்காலங்களில் அரசியலை மையமிட்டும் (காந்தி புராணம்) சாதியை மையமிட்டும் (குலாலர் புராணம், செங்குந்தர் புராணம்) புராணங்கள் உருவாகின.

சமயத்தில் புராணங்கள் மிகுந்த மதிப்பைப் பெற்றிருந்தன. வடமொழிப் புராணங்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளன. கோயில்களின் பெருமையினை வளர்க்கத் தல புராணங்கள் மிகுதியாக உதவின. மக்கள் தலங்களின் மீது பற்று வைக்கத் தல புராணங்கள் மிகுதி யாக உதவின. மக்கள் வாழும் ஊர்களில் பஞ்சம் வறட்சி ஏற்பட்டு மக்கள் வெளியேறும் சூழலைத் தவிர்க்க தலத்தின் மீதுள்ள பற்றுதான் கைகொடுத்தது. கோயில்கள் தலபுராணங்களைப் பெற்றிருப்பது மதிப்பாகக் கருதப்பட்டது. சமயத் தொடர்பு பெற்று வளர்ந்த புராணம் அடியவர்களைப் பாடுவதாகவும் அமைந்தது. காலப்போக்கில் அவை தலபுராணங்களாக வளர்ச்சி பெற்றன.

தலபுராணங்கள் பொதுவாகத் தலத்தின் பெருமைகள், வழி பட்டுப் பயனடைந்தோர், தீர்த்தங்களின் மகிமை, தவம் இயற்றிய முனிவர்கள், இறைக் காட்சி பெற்ற தவத்தோர் ஆகியவற்றைப் பொருளாகக் கொண்டு கற்பனைகள் கலந்து இலக்கியச் சுவை பொருந்தி அமைகின்றன. அக்காலத்தில் தலபுராணங்கள் மக்களைக் கவர்ந்தன. கொடியவர்களும் மனம் திருந்திக் கோயில்களுக்கு வந்து இறைவனை வழிபட்டு நல்லவர்களாக மாறிய கதைகள் தலபுராணங்களில் இடம் பெற்றன. அவற்றை மக்கள் விரும்பிப் படித்து நல்ல எண்ணங் களை வளர்த்துக் கொண்டனர். ஒவ்வொரு தலபுராணத்திலும் இந்திரன் முதலிய தேவர்கள் சாபம் நீங்கவும், பாவம் போக்கவும் அந்தந்த கோயிலுக்கு வந்து வழிபட்டு பயன் பெற்ற தாகக் கதைகள் அமைக்கப் பட்டுள்ளன. திருமுறைகளில் தலபுராணச் செய்திகள் பெரு மளவு தழுவப்பட்டிருக்கின்றன. தலபுராணங்களில் வரும் பல செய்திகள் வழிபடு கடவுளை உயர்த்துவதற்காகவே அமைக்கப் பட்டன.

## கொங்கு நாட்டுத் தலபுராணங்கள்

கொங்குத் தலபுராணங்கள் யாவும் 300 ஆண்டுகளுக்குள்

எழுதப்பட்டவையே. இவற்றுள் இயற்கை பற்றியும் மக்கள் பற்றியும் பல செய்திகள் உள்ளன. நல்ல இலக்கியங்களாகவும் உள்ளன. நமது ஊர், நாடு, மக்கள் இவற்றின் மீது பற்று உண்டாக்கவே இவை பாடப் பெற்றன. அனைத்துத் தலங் களும் இறையருள் மிக்கவை என்பதைப் பற்றி இவை பேசுகின்றன. கொங்கு நாட்டில் பாடல் பெற்ற சிவதலங்கள் உள்ளன. அவை கொங்கு ஏழு தலங்கள் எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. ஒவ்வொரு தலத்திற்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. அத்தகைய சிறப்பினை அக்கோயிலின் தலபுராணங்கள் எடுத்துக் கூறுகின்றன.

## கருவூர்ப்புராணம்

சோழநாட்டின் தலைநகராக இருந்த கருவூர் வரலாற்றுப் புகழ் பெற்றது. வஞ்சி, ஆனிலை என்ற சிறப்புப் பெயர்கள் இதற்கு உண்டு. கருவூர்ப்புராணம் பாடிய வர் பெயர் தெரியவில்லை. தமது குருநாதர் பெயரைச் சத்தியஞானி என்று குறிப்பிடுகின்ருர் இந் நூலாசிரியர். கருவூர்த் தலச் சிறப்பும், ஆனிலையப்பரை வழி பட்டுக் கதி பெற்ற மேலோர் களையும், முக்கியமாகப் புகழ்ச் சோழர், எறிபத்தர், கருவூர்த் தேவர் முதலியோர்களைப் பற்றியும் இப்புராணத்தில் விளக்கப்பட்டுள்ளது. கருவூர்த் தேவரின் விரிவான வரலாறு இதில் கூறப்பட்ட அளவுக்கு வேறு எந்த நூலிலும் கூறப்பட வில்லை.

## வெஞ்சமாக்கூடல் புராணம்

கருவுருக்கு அண்மையில் தென் மேற்குத் திசையில் பத்துக்கல் தொலைவில் உள்ள வெஞ்சமாக் கூடல் என்ற பாடல் பெற்ற சிவத்தலம் ஒன்று உள்ளது. இவ் வெஞ்சமாக்கூடல் சுந்தரமூர்த்தி நாயனரால் பாடல் பெற்றது. சிவபெருமான் தம்மிடம் பற்று மிகுந்த ஒரு கிழவியிடம் தம் பிள்ளைகளை ஈடு வைத்துப் பொன் பெற்றுச் ஸ்ரீசுந்தரருக்கு அளித்தார் என்று இத்தல புராணம் கூறுகிறது. அடியவருக்கு அருள் செய்யும் உள்ளம் கொண்டவன் இறைவன் என்னும் கருத்தை இத்தலபுராணம் உணர்த்துகிறது. பெண் சாபமுடையவர்கள் இங்கு எழுந்தருளியுள்ள கல்யாண விகிர்தீசுவரரை வழிபட்டால் சாபம் நீங்கும் என்பது மக்களின் நம்பிக்கை.

## திருப்பாண்டிக் கொடுமுடிப் புராணம்

கொடுமுடியின் பெருமை களைத் தொகுத்து வடமொழி யிலும் தென்மொழியிலும் புராணங்கள் உள்ளன. திருப் பாண்டிக் கொடுமுடிப் புராணம் என்னும் நூல் பாடல்களில் உள்ளது. இதன் ஆசிரியர் பெயர்

தெரியவில்லை. ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் நடந்த வலிமைப் போட்டியில் ஆதிசேடன் மேருவின் ஆயிரம் சிகரங்களை எடுத்துச் சுற்றினான். அப்போது ஒரு சிகரம் ஐந்து மணிகளாக உடைபட்டுச் சிதறி வீழ்ந்தது. அப்படி வீழ்ந்ததில் வைரமணி கொடுமுடியாக உருப் பெற்றுள்ளது என்று கொடு முடிப் புராணம் கூறுகிறது. கொடுமுடி என்பது பெரிய சிகரம் என்று பொருள்படும். அகத்தியர் காவிரியாற்றைத் தனது கமண்டலத்தில் அடைத்து வர அதைக் காகம் இந்த இடத்தில் தான் கவிழ்த்தது எனத் திருப் பாண்டிக் கொடுமுடிப் புராணம் கூறும்.

### திருச்செங்கோட்டுத் தலபுராணம்

திருச்செங்கோட்டுக்கு நாககிரி, செங்குன்றூர் என்ற பெயரும் உண்டு. நாககிரியின் வரலாற்றை யும், இங்கு கோயில் கொண்டுள்ள தெய்வத் திருமேனி களின் சிறப்புக்களையும், இங்குள்ள புண்ணிய தீர்த்தங் களையும், இவற்றின் வரலாற்றுப் பெருமை களையும் தென்காசி கவிசராசப் பண்டிதர் திருச்செங்கோட்டுத் தலபுராணத்தில் பக்திச் சுவை யோடு வெளிப்படுத்தி உள்ளார்.

நாகமலை தோன்றிய வரலாறு குறித்தும், உமையம்மை தவம் செய்த சிறப்பு குறித்தும், சிவன் தனது உடலில் பாதியை உமைக்கு வழங்கியது குறித்தும், அங்குள்ள தீர்த்தங்களின் சிறப்பு குறித்தும், இவ்வூரில் நடந்த பல்வேறு சிறப்புகள் குறித்தும் தல புராணத்தில் ஆசிரியர் விவரிக் கிறார். இவ்வாறு தலபுராணங்கள் பல்வேறு செய்திகளைத் தலங்கள் குறித்துக் கூறுகிறது. இவை அனைத்தும் தலங்களின் பெரு மையை எடுத்துக் கூறுவதாக அமைகின்றது. இச்செய்திகளின் மூலம் அவ்வுரைப் பற்றியும், அக்கோயிலைப் பற்றியும் மக்கள் மனதில் நம்பிக்கையுட்ட கூறப் பட்டவையாகவே தெரி கின்றது.

### பவானி கூடற்புராணம்

பவுசுயோத்தர புராணம், பிரம்ம கைவர்த்த புராணம் ஆகிய வடமொழிப் புராணங் களில் இத்தலத்தைப் பற்றிய குறிப்புகள் உண்டு. பிரம்ம கை வர்த்த புராணம் வடமொழியில் 33 அத்தியாயங்களைக் கொண்டது. இதனை ஓராட்டுக் குப்பை செட்டிபாளையம் மகாவித்து வான் வாசுதேவ முதலியார் அவர்கள் தமிழில் செய்யுள் வடிவாக இயற்றி உள்ளார். இந் நூல் பவானி கூடற்புராணம் என்று பெயர் பெற்றது. குபேரன் புசித்த தலம் என்றும், இத் தீர்த்தத்தில் நீராடினால் சாபம்

நீங்கப் பெறலாம் என்றும் தீர்த்தங்களின் பெருமை போன்ற பல்வேறு நிகழ்வுகள் இதில் கூறப்பட்டுள்ளன.

## திருமுருகன்பூண்டித் தலபுராணம்

முருகன் வழிபட்ட தலம். அகத்தியர், மார்க்கண்டேயர், துர்வாசர் ஆகியோரும் வழிபட்ட தலம். இதற்கு மாதவி வனம் என்ற பெயரும் உண்டு. சுந்தரர் இவ்வழியே வந்தபோது இறைவன் தனது புதகணங்களை வேடர் வடிவில் ஏவி சேரமான் பெருமான் சுந்தரருக்கு அளித்த செல்வங்களைப் பறிக்கச் செய் தார். பின்னர் இறைவன் அரு ளால் அப்பொருட்கள் மீண்டும் சுந்தரருக்குக் கிடைத்தன. இத் தகைய சிறப்பு மிக்க வரலாறுகள் நிகழ்ந்த தலம் இது. இத் தலத்திற்கு செட்டிபாளையம் வித்துவான் வாசுதேவமுதலியார் அவர்கள் பாடியதே திருமுருகன் புண்டித் தலபுராணம் ஆகும்.

## அவிநாசி தலபுராணம்

திருப்புக்கொளியுர் என்ற சிறப்புப் பெயர் இத்தலத்திற்கு உண்டு. இத்தலத்துப் பெருமை களை வடமொழிக் கந்தபுராணம் சிவமான்மிய காண்டம் என்னும் பகுதி 60 அத்தியாயங்களுக்கு மேல் விரித்துக் கூறுகிறது. இதனைத் தமிழில் அவினாசித் தலபுராணம் என்னும் பெயரால் 1021 பாக்களில் மொழிபெயர்த்த வர் இளையான் கவிராயர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலை வாய்ப் பிள்ளையை அழைத்த நிகழ்வு பற்றி இதில் சிறப்பிக்கப் பட்டுள்ளது. காசியில் வாசி அவிநாசி என்பதால் காசி போவதைத் தடுக்கும் முறையில் இவ்வுர்ப் பெருமை பேசப்படு கின்றது. அயலவரையும் அயல் இடங்களையும் போற்றும் நம் தமிழ் மக்களுக்கு நம் மண்ணின் பெருமையை உணர்த்தும் விதமாக இப்புராணம் எழுதப் பட்டு உள்ளது.

தமிழ்ப்புராணங்கள் வரலாற்று டன் காவியங்களையும் இணைத்து வழங்கின. இவை நல்ல நோக்கங்களுடன் எழுதப் பட்டது. மக்களிடையே தெய்வ நம்பிக்கையையும் சமய நம்பிக்கை யையும் தோற்றுவிப்பதற்காகவே தலபுராணங்கள் எழுதப்பட்டன. பஞ்சம் நோய் காரணமாக மக்கள் கூட்டம் கூட்டமாக தங்களது ஊரை விட்டுச் செல்வதைத் தடுக்கவே இத்தகைய புராணங் கள் எழுதப்பட்டன. தங்களது ஊரின் பெருமைகளையும், சிறப்புக்களையும் மக்கள் அறிந்து கொள்வதற்காகவே பெரும்பாலும் தலபுராணங்கள் எழுதப்பட்டன.

●

# சங்ககால நெசவுத் தொழிலின் ஆடை நுட்பம்

**சு.ரேகா,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி),
சேலம் - 7.

## முன்னுரை

மனித சமுதாயத்தினுடைய நாகரிகத்தின் தொட்டிலாக பண்டைய தமிழகம் கருதப்படு கின்றது. பண்டைய தமிழரின் நாகரிக நிலையை வரலாற்று ஆய்வாளர் கூறியுள்ளனர். தொடக்க காலத்தில் வாழ்ந்த ஆதிக்குடிகள் இலைகளையும் தழைகளையும் உடையாக உடுத்தினர். மரப்பட்டைகளின் தோலை உரித்து மரவுரியாகப் பயன்படுத்தினர். விலங்குகளின் தோலை உரித்து தோலாடை யாகவும் பயன்படுத்தினர். பின்பு நாகரிக வளர்ச்சியடைந்து நூல் நூற்று ஆடையாக நெய்து அணிந்தனர். நெய்யப்பட்ட ஆடையில் பலவிதமான கலை நுட்ப வேலைபாடுகள் செய்து அமைத்தனர். பல வகை வண்ணங்கள் புசப்பட்ட மெல்லிய ஆடைகளை உடுத்தினர். சங்ககால மக்கள் பயன்படுத்திய ஆடைகள் பற்றியும், ஆடையின் நுட்பத்தைப் பற்றியும் இக் கட்டுரையில் ஆராயப்படுகிறது.

## நெசவுத்தொழிலின் கலைநுட்பம்

ஒரு நாட்டின் நாகரிகத் தொன்மையை அறிந்துகொள்ள அந்நாட்டின் பழங்குடித் தமிழர் அணிந்த ஆடைகள் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன. பண்டைய தமிழர் நெசவுத் தொழிலை ஒரு கலை நுட்ப தொழிலாக பாவித்து பின்பற்றி வந்துள்ளனர். தமிழரின் ஆடையில் அமைந்துள்ள அறிவு நுட்பத்தின் தன்மையை சங்க இலக்கியம் எடுத்தியம்புகின்றன. தமிழகத்தின் தலைசிறந்த தொழில்களில் நெகவுத்தொழில் சிறப்பிடம் பெற்றிருந்தது. நெசவுத்தொழிலில் பண்பட்ட மக்களில் பழந்தமிழர்களின்

பங்கு முதன்மையாக கருதப்படு கின்றன. தமிழர்கள் ஆடைகளை பருத்தி, பட்டு, உரோமம் ஆகிய வற்றைக் கொண்டு நெய்தனர். சங்ககால மக்கள் ஆடையும் அறிவும் இணைத்து வெளிப் படுத்தியுள்ளனர். உடலை மறைப்பதற்காக மட்டுமின்றி அழகுக்காகவும் உடையைப் பயன்படுத்தியுள்ளனர். அவ் வாடைகள் பாம்புத்தோல், பாலாவி, மூங்கில் தோல், புந்துகில் ஆகிய தன்மையில் உருவாக்கி தம் அறிவுத் திறத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

நெசவுத்தொழில் தொல் காப்பியர் காலத்திற்கு முந்தைய நிலையிலிருந்து இருந்துள்ள தை,

உடைபெயர்த்து உடுத்தல்
ஜதொல்.மெய்.நூற்.14

என்னும் நூற்பா மூலம் அறியலாகிறது.

கவிதை எழுதும் புலவனோடு நூல் இழைக்கும் மகளிரை ஒப்பிட்டு கூறியுள்ளதை,

பஞ்சிதன் சொல்லாக
பனுவலிழையாக

செஞ்சோற் புலவனே
சேயிழையாய் - எஞ்சாத

நன்னூல். சூத்திரம்-23

என்னும் சூத்திரம் புலமைத் தொழிலுக்கு நிகராக (இணை யாக) நெசவுத் தொழிலை ஒப்பிட்டு கூறியுள்ளதை எடுத்தி யம்புகின்றது.

நெசவாளர்கள் காருகர் எனப் பெயர்
பெற்றிருந்ததை,

நூலினும் மயிரினும் நுழைநூற்
பட்டினும்

பால்வகை தெரியாப் பன்னூறு
அடுக்கத்து

நறுமடி செறிந்த அறுவை வீதியும்
சிலம்பு.14:205-207

என்று சிலப்பதிகாரம் கூறு கின்றது. மயிராலான துணிகளும், விலை உயர்ந்த கம்பளங்களும், பட்டு ஆடைகளும், பருத்தி நூல் துணிகளும் நெய்வதில் திறமை பெற்றிருந்தனர். சிறப்புமிக்க காவிரிபும்பட்டினத்தில் நெச வாளர்கள் சேர்ந்தாற்போல் வாழ்ந்துள்ளதை குறிப்பிடுகிறது.

பழந்தமிழர் ஆடைகளை உடல் மறைக்கும் ஆடையாக மட்டும் உருவாக்கவில்லை. நெசவு செய்யும் திறத்தில் பல்வேறுவித மான கலை நுட்பத்துடன் வடி வமைத்திருக்கின்றனர்.

பாம்புரி யன்ன வடிவின காம்பின்

கழைபடு சொலியி னிழையணி
வாரா

ஒண்புங் கலிங்க முடீஇ நுண்புண்
புறம்.383:10-12

பாம்பின் தோல் போன்ற வடி வினையுடைய ஆடையை உருவாக்கினர். மூங்கிற்கோலின் உட்புறத்தேயுள்ள தோல்போன்று, நெய்யப்பட்ட இழைகளின் வரிசை அறியவியலாத ஒள்ளிய பு வேலைப்பாடு செய்யப்பட்டு

நுட்பத்துடன் பயன்படுத்தியுள்ளதை புறநானூற்று பாடல் எடுத்தியம்புகின்றன.

### நெசவுத்தொழிலின் சிறப்பு

நெசவுத்தொழிலின் சிறப்பையும் நுண்ணறிவையும் புலப்படுத்தும் வகையில் முதுமொழிகள் காணப்படுகின்றன.

**ஆள்பாதி ஆடைபாதி**

**ஆடையில்லா மனிதன் அரை மனிதன்**

**தோற்றம் தரும் ஏற்றம்**

போன்ற தொடர்கள் ஆடை உடுத்தலின் இன்றியமையாமையை விளக்குகின்றன.

பண்டைய தமிழர் ஆடைக்குரிய இழையை குறிப்பதற்கும் நூல் என்னும் சொல்லை பயன்படுத்தியுள்ளனர். இரண்டிற்கும் பொது சொல்லாக குறிப்பிட்டது தமிழருக்கே உரிய தனிச் சிறப்பாக கருதப்படுகின்றது.

### நுண் வேலைப்பாடு

ஆதிகால மனிதன் இலை தழைகளை உடுத்தி உடலை மறைத்தான். அடுத்த நிலையில் விலங்குகளின் தோலினைக் கொண்டு மானம் காத்தான். தன் உடலை ஆடையில் மறைக்க வேண்டும் என்ற விந்தையை கற்றுக்கொண்டவன் ஆடையை அழகாகவும் வடிவமைக்க அறிந்துகொண்டான்.

சங்ககால தமிழர் பாம்புத் தோல் போன்றும், மூங்கிலின் உட்புறத்தோல் போன்றும், புகை விரிந்தாற் போன்றும், நீராவி படந்தாற் போன்றும் உள்ள பல விதமான மெல்லிய ஆடைகளை நுட்பத்துடன் அமைத்துள்ளனர். அக்காலத்தில் மக்கள் மிக மெல்லிய ஆடைகளை உடுத்தினர்.

### பாம்புத்தோல்

சங்ககாலத்தில் தயாரித்த மிக மெல்லிய ஆடைக்கு பாம்பு உரித்த தோலை உவமையாக கூறியுள்ளனர்.

பொருநராற்றுப்படையில் நெசவுத் தொழிலின் நுண்மைத் தன்மையை முடத்தாமக்கண்ணியார் பாம்புத்தோலை உவமையாக கூறியுள்ளார். இதனை,

**நோக்குநுழை கல்லா நுண்மைய புக்கனிந்**

**தரவுரி யன்ன அறுவை**

**ஐபொருந.82-83**

Owned Published and Printed by P. Sangamithira Published from 43/13, Paddy field Road, Perambur, Chennai - 600 011. Printed at I.M. Process, 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai - 600 014. Editor : Dr. M. Pattazhagan

அரவுரியைப் போல இழை நுழைந்த வழி குறித்துப் பார்க் கவியலாத நுட்பத்தை விளக்கு கின்றன.

தமிழர் பல விதமான பூ வேலைப்பாடு நிறைந்த ஆடை களை நெய்து அணிந்துள்ளனர். பு வேலைப்பாட்டில் பலவகை யான வண்ணங்களை பயன் படுத்தி நுட்பத்துடன் செய்ய அறிந்திருந்தனர். புறநானூற்றுப் பாடலில் வெள்ளிய புக்கள் நிறைந்த வேலைபாடுடன் செய்யப்பட்ட ஆடையை



குறிக்க,

பாம்புரித் தன்ன வான்புங்
கலிங்கம்
ஜபுறம்.397:15

பாம்பினது உரியாகிய தோல் போன்று அமைந்துள்ளதை எடுத்தியம்புகின்றன.

பாலாவியாடை

ஆயர்குடி மக்கள் மேய்த்தல் தொழிலை முதன்மையாக செய்தனர். ஆநிரை மூலம் கிடைக்கும் பாலை காய்ச்சுவர். பாலிலிருந்து பிரித்தெடுக்கும் பாலாடையை உவமையாக பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது. இதனை,

ஆவி யன்ன வவிர்நூற் கலிங்கம்
ஜபெரும்.469

என்னும் வரியில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆடையின் மென்மைக்கு பால் காய்ச்சும் போது எழும் பாலாவியை போன்று விளங்கும் நூலால் செய்த ஆடையை குறிப்பிட்டுள் ளார்.

புந்துகில்

இந்திரகோபம் புச்சியைப் போன்ற நிறமும் மென்மையும் உள்ள ஆடையை புந்துகில் என்னும் பெயரில் குறிப் பிட்டுள்ளனர். இதனை,

கோபத் தன்ன தோயாப் புந்துகில்
திருமுருகு.15

என்னும் திருமுருகாற்றுப் படை பாடல் வரியில் குறிப் பிடப்பட்டுள்ளது.

பருத்தியாடை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த தமிழர் பருத்தி ஆடை நெய்து அணிந்துள்ளனர். மக்களின் வாழ்க்கை அவர்களது நாட்டின் தட்பவெப்ப நிலையைப் பொறுத்து அமைந்துள்ளது. வாழும் வாழ்க்கை மட்டுமின்றி உடுத்தும் உடையும் தட்ப வெப்ப நிலைக்கேற்ப அமைத்துக்கொள்ளும் நுட்ப அறிவை தமிழர் பெற்றிருந்தனர். வேனிற்காலத்தல் பெரும்பாலும்

பருத்தியாடையைப் பயன் படுத்தினர். பருத்தியிலிருந்து நூல் நூற்றலை தமிழர் அறிந் திருந்தனர் பருத்தியின் முக்கியத் துவத்தை அறிந்திருந்தனர்.

சங்ககாலத்தில் பருத்தி சிறப்பிடம் பெற்றுள்ளது. குறிஞ்சிப்பாட்டில் பெண்கள் சூடிய 99 மலர்களின் பெயர்கள் பட்டியலிட்டுள்ளது. அப்பட்டி யலில் பருத்திப் புவின் பெயரை,

பாரம் பீரம் பைங்குருக் கத்தி
குறிஞ்சி.92

பாரம் என்று கபிலர் குறிப் பிட்டுள்ளார். மலர்களின் வரிசை நிலையில் பருத்திப் புவையும் சங்ககால மக்கள் வைத்து பயன் படுத்தியமையை அறியலாகிறது.

## சேமிப்பு

பருத்தி மூட்டைகளை சேமித்து வைத்திருந்தனர் என்பதை,

கோடைப் பருத்தி வீடுநிறை
பெய்த
மூடைப் பண்டம்
புறம்.393:12-13

புறநானூற்றுப் பாடல் எடுத்தியம்புகின்றன.

## நூல் நூற்றல்

நூல் நூற்கும் வேலையில் பெண்கள் அதிகமாக ஈடு பட்டிருந்தனர். நூல் நூற்கும் வேலையை செய்வதற்கு பொறுமை அவசியமானதாக உள்ளது. அதன்காரணமாக அதிகம் ஈடுபட்டுள்ளதாக கருதப்படு கின்றது. நூல் நூற்கும் பெண் களை பருத்திப் பெண்டிர் என்று அழைப்பர். கணவனை இழந்து கைம்மை நோன்பு நோற்கும் பெண்களும், மற்றவரும் பஞ்சினை நூற்றனர்.

நூல் நூற்கும் பெண்கள் இரவு நேரத்திலும் பஞ்சைப் புடைத்து சிறு தூறுகளை களைந்தனர்.

சிறையுஞ் செற்றையும் புடையந
ளெழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ
விளக்கத்துக் புறம்.326:4-5

பருத்தியை நூலாக்கும் பருத்திப் பெண்டிர் இருந் துள்ளதை புறநானூறு எடுத்தியம்புகின்றது.

## முடிவுரை

★ சங்ககால மக்கள் ஆடை நெய்யும் திறத்தில் மிகவும் கைத் தேர்ந்தவராக இருந்திருக் கின்றனர்.

★ ஆடையின் இடையே இழை நுழைந்த வழி எவரும் காணமுடி யாதவாறு நுண்மையும் மென்மையும் வாய்ந்ததாக அமைந்துள்ளன.

★ தற்கால நிலையைப் போல் அறிவியல் வளர்ச்சி அடையாத காலத்திலும் நம்முன்னோர் நுண்மாண் நுழைபுலம் வாய்ந்தவர்களாக இருந்துள்ளனர்.

●